திருமந்திரம்

Q23:417x8
N09
11 .25

# திருமந்திரம்.

1

குறிப்பு:— இரண்டாம்பாகம் மேமீ இறுதியில் வெளி வரும். அதனுடன் திருமூலர் படமும், சரிதமும் அனுப்பப் படும்.

இங்ஙனம்:

வ. மு. துரைசாமி முதலியார்,

ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபை,

இராயப்பேட்டை, சென்னை.

உமாபதி குருப்பிரகாசம் பிரஸ், இராயப்பேட்டை, சென்னை.

118925

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருமந்திரம்.

## விநாயகர் காப்பு.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## சிறப்புப் பாயிரம்.

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குட்டென் றிசைக்கொரு வேந்தனைக்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. (௧)

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினு ணான்குணர்ந் தைந்தி
வென்றனன் னாறு விரிந்தன னேழும்பர்ச்
சென்றனன் றானிருந் தானுணர்ந் தெட்டே. (௨)

ஒக்கநின் றானை யுலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாடொறும்
பக்கநின் றாரறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. (௩)

அகலிடத் தார்மெய்யை யண்டத்து வித்தைப்
புகலிடத் தெம்மெய்யைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்மிர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேயிரு ணீங்கிநின் றேனே. (௪)

* சிவனொடொக் குந்தெய்வந் தேடினு மில்லை
அவனொடொப் பாரிங்கு யாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. (௫)

* அவனை யொழிய வமரரு மில்லை
அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவனன்றி மூவரா லாவதொன் றில்லை
அவனன்றி யூர்புகு மாறறி யேனே. (௬)

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்று மில்லாத் தலைமகன்
†தன்னையொப் பாமென்னி லப்பனு மாயுளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. (௭)

* தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினு மீச னருளறி வாரில்லை
சேயினு நல்ல னணியனல் லன்பர்க்குத்
தாயினு நல்லனற் றாழ்சடை யோனே. (௮)

† தன்னை யப்பா வெனனில் என்றும் பாடம்.



பொன்னாற் புரித்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க விருந்தவன் பேர்நந்தி
என்னாற் றொழப்படு மெம்மிறை மற்றவன்
தன்னாற் றொழப்படு வாரில்லை தானே. (௯)

* தானே யிருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே தடவரைத் தண்கட லாகுமே. (௰)

அயலும் புடையுமெம் மாதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வ மியாதுமொன் றில்லை
முயலு முயலில் முடிவுமற் றாங்கே
பெயலு மழைமுகிற் பேர்நந்தி தானே. (௧௧)

கண்ணுத லானொரு காதல னிற்கவும்
எண்ணிலி தேவ ரிறந்தா ரெனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ண லிவனென் றறியகி லார்களே. (௧௨)

* மண்ணளந் தான்மல ரோன்முதற் றேவர்கள்
எண்ணளந் தின்ன நினைக்கிலா ரீசனை
விண்ணளந் தான்றன்னை மேலளந் தாரிலைக்
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. (௧௩)

* கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணனெம் மாயன்
கடந்துநின் றானவர்க் கப்புற மீசன்
கடந்துநின் றானெங்குங் கண்டுநின் றானே. (௧௪)

ஆதியு மாயா னாயுட லுண்ணின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தாரருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையு
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. (௧௫)

கோதுகு லாவிய கொன்றைக் குழற்சடை
மாதுகு லாவிய வாணுதற் பாகனை
யாதுகு லாவி யமரருந் தேவருங்
கோதுகு லாவிக் குணம்பயில் வாரே. (க௬)

* காய மிரண்டுங் கலந்து கொதிக்கினும்
ஆயங் கத்தூரி யதுமிகு மவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈச னுறவுக் கெதிரில்லை தானே. (கஎ)

* அதிபதி செய்தவ ளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவ நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கி
இதுபதி கொள்ளென்ற வெம்பெரு மானே. (கஅ)

இதுபதி யேலங் கமழ்பொழி லேழு
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவ நோக்கி
அதுபதி யாக வமருகின் றானே. (க௯)

முடிவும் பிறப்பையு முன்னே படைத்த
அடிக ளுறைவு மறநெறி நாடில்
இடியு முழக்கமு மீச ருருவங்
கடிமலர்க் குன்ற மலையது தானே. (உ0)

வானப் பெருங்கொண்டன் மாலயன் வானவர்
ஊனப் பிறவி யொழிக்கு மொருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தவெங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. (உக)

* மனத்தி லெழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னெனில்தா நினைக்கிலர்
எனக்கிறை யன்பில னென்ப ரிறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. (உஉ)



வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணை
நில்லென நிற்பித்த நீதியு ளீசனை
இல்லென வேண்டா விறையவர் தம்முதல்
அல்லும் பகலு மருளுகின் றானே. (உ௩)

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்றனைத்
தேற்றுமி னென்றுஞ் சிவனடிக் கேசெல்வ
மாற்றிய தென்று மயலுற்றுச் சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. (உ௪)

* பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கு மின்ப மருளுந்
துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதான்
மறப்பிலி மாயா விருத்தமு மாமே. (உ௫)

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் றொழுதாற்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே. (உ௬)

சந்தியெ னத்தக்க தாமரை வாண்முகத்
தந்தியி னீச னருணமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படுமவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. (உஎ)

* இணங்கிநின் றானெங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானு
முணங்கிநின் றானம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. (உஅ)

* காணநில் லாயடி யேற்குற வாருள
நாணநில் லேனுன்னை நான்றழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய தாகி யமர்ந்துநின் றானே. (உ௯)

* வானின் றழைக்கு மழைபோ லிறை,
தானின் றழைக்குங்கொல் லென்று த
ஆனின் றழைக்கு மதுபோலென் னந்
நானின் றழைப்பது ஞாலங் கரியே. (௧௦)

மண்ணகத் தானொக்கும் வானகத் தானொக்கும்
விண்ணகத் தானொக்கும் வேதத்தி னொக்கும்
பண்ணகத் தின்னிசைப் பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. (௧௧)

தேவர் பிரானம் பிரான்றிசை பத்தையு
மேவு பிரான்விரி நீருல கேழையுந்
தாவு பிரான்றன்மை தானறி வாரில்லை
பாவு பிரானருட் பாடலு மாமே. (௧௨)

* பதிபல வாவது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை யுணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரு
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. (௧௩)

சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்த னமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன வாயிர நாமமும்
போந்து மிருந்தும் புகழுவென் றானே. (௧௪)

ஆற்றுகி லாவழி கீரு மிறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை யெட்டுக்கு
மாற்றுவ னப்படி மாட்டு மாமே. (௧௫)

* அப்பனை நந்தியை யாரா வமுதினை
ஒப்பிலி வள்ளலை யூழி முதல்வனை
எப்பரி சாயினு மேத்துமி னேத்தினால்
அப்பரி சீச னருள்பெற லாமே. (௧௬)



நானுநின் றேத்துவ னாடொறு நந்தியைத்
தானுநின் றான்றழற் போலொக்கு மேனியன்
வானினின் றார்மதி போலுட லுள்ளுவந்
தூனினின் றாங்கே யுயிர்க்கின்ற வாறே. (௧௭)

* பிதற்றொழி யேன்பெரி யானரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாவுரு வானைப்
பிதற்றொழி யேனெங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் றானே. (௧௮)

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தித்தனை யங்கே திளைக்கின்ற தேவனை
எத்தியு மெம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீச னருட்பெற லாமே. (௧௯)

குறைந்தடைந் தீசன் குரைகழ னாடி
நிறைந்தடை செம்பொனி னேரொளி யொக்கு
மறஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்யான் புகுந்துநின் றானே. (௨௦)

* சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை போற்றவல் லார்க்குப்
பனஞ்செய்த வாளுதற் பாகனு மங்கே
இனஞ்செய்த மான்போ லிணங்கிநின் றானே. (௨௧)

போயரன் றன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னன்முடி செய்தது வேநல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே. (௨௨)

* அரனடி சொல்லி யரற்றி யழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே. (௨௩)

போற்றியென் பாரம ர்புனி தன்னடி
போற்றியென் பாரச ர்புனி தன்னடி
போற்றியென் பார்மணி தர்புனி தன்னடி
போற்றியென் னன்புள் விளங்கவைத் தேனே. (௩௪)

* விதிவழி யல்லதிவ் வேலை யுலகம்
விதிவழி யின்பம் விருத்தமு மில்லை
துதிவழி நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னாமே. (௩௫)

அந்திவண் ணாவர னேசிவ னேயென்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேயென்று
வந்திவ் வண்ணமென் மனம்புகுந் தானே. (௩௬)

* மனையி லிருந்தவர் மாதவ ரொப்பர்
நினைவு ளிருந்தவர் நேசத்து ணிற்பர்
பனையு ளிருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்னின்பந் தானே. (௩௭)

அடியார் பரவு மமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியா ரருளும் பரம்பர னெந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே. (௩௮)

நரைபசு பாசத்து நாதனை யுன்னி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாசச் செழுங்கட னீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. (௩௯)

சூடுவ னெஞ்சிடை வைப்பன் பிரானென்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவ னாடி யமரர்பிரா னென்று
நாடுவ னானின் றறிவது தானே. (௪௰)



# வேதச்சிறப்பு.

* வேதத்தை விட்ட வறமில்லை வேதத்தின்
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே. (௧)

வேத முரைத்தானும் வேதிய னாகிலன்
வேத முரைத்தானும் வேதா விளங்கிட
வேத முரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேத முரைத்தானு மெய்ப்பொருள் காட்டவே. (௨)

இருக்குரு வாமெழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்து ளோங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே. (௩)

* திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி யொன்றாக வேதாந்த மோதுமே. (௪)

* ஆறங்க மாய்வரு மாமறை யோதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. (௫)

* பாட்டு மொலியும் பரக்குங் கணிகையர்
ஆட்டு மறாத வவனியின் மாட்டாத
வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டு மிடஞ்சென் றிகலலுற் றாரே. (௬)

## ஆகமச்சிறப்பு.

அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள வாகமம்
அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே. (௧)

அண்ண லருளா லருளுஞ் சிவாகமம்
எண்ணி லிருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவ ரீசன் விழுப்பு முரைத்தனர்
எண்ணிநின் றப்பொரு ளேத்துவ னானே. (௨)

* பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி வாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலா னரன்சொன்ன வாறே. (௩)

* அண்ண லருளா லருளுந்திவ் யாகமம்
விண்ணி லமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணி லெழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலு நீர்மே லெழுத்தது வாகுமே. (௪)

பரனாய்ப் பராபரங் காட்டி யுலகிற்
றரனாய்ச் சிவதன்மந் தானேசொல் காலத்
தரனா யமரர்க ளர்ச்சிக்கு நந்தி
யுரனாகி யாகம மோங்கிநின் றானே. (௫)

* சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேச ருருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மிற்றாம் பெற்ற
நவவா கமமெங்க ணந்திபெற் றானே. (௬)



பெற்றநல் லாகமங் காரணங் காமிகம்
உற்றநல் வீர முயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே. (௭)

* அண்ண லருளா லருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ண லறைந்த வறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே. (௮)

*மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்முட னேசொல்லிக்
காரிகை யார்க்குங் கருணைசெய் தானே. (௯)

*அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டும்
உணர்த்து மவனை யுணரலு மாமே. (௧௦)

## குருபாரம்பரியம்.

* நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திக ணால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவ ரென்னோ டெண்மரு மாமே. (௧)

* நந்தி யருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி யருளாலே மூலனை நாடினோம்
நந்தி யருளாவ தென்செயு நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே. (௨)

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரம னுருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த வெழுவரு மென்வழி யாமே. (௩)

நால்வரு நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரு நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரு நான்பெற் றதெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னார்களே. (௪)

மொழிந்தது மூவர்க்கு நால்வர்க்கு மீசன்
ஒழிந்த பெருமை யிறப்பும் பிறப்புஞ்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. (௫)

எழுந்துநீர் பெய்யினு மெட்டுத் திசையுஞ்
செழுந்தண் ணியமங்கள் செய்யினென் றன்னல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
யழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. (௬)

## திருமூலர் வரலாறு.

நந்தி யிணையடி நான்றலை மேற்கொண்டு
புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை யரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. (௧)

செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்று
அப்படி நல்கு மருணந்தி தான்பெற்று
தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பி லெழுகோடி யுகமிருந் தேனே. (௨)



இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியை
யருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. (௩)

சதாசிவ தத்துவ முத்தமிழ் வேத
மிதாசனி யாதிருந் தேனின் றகால
மிதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
யுதாசனி யாதுட னேயுணர்ந் தோமால். (௪)

மாலாங்க னேயிங்ஙன் யான்வந்த காரண
நீலாங்க மேனி நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. (௫)

நேரிழை யாவா ணிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவ னாவடு தண்டுறை
சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. (௬)

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியி னீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவ னாமங்க ளோதியே. (௭)

இருந்தேனிக் காயத்தே யெண்ணிலி கோடி
யிருந்தே னிராப்பக லற்ற விடத்தே
யிருந்தே னிமையவ ரேத்தும் பதத்தே
யிருந்தேனென் னந்தி யிணையடிக் கீழே. (௮)

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக விறைவன் படைத்தனன்
றன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே. (௯)

*ஞான தலைவிதன் னந்தி நகர்புக்கு
யூனமி லொன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டியென் னாதனை யர்ச்சித்து
நானு மிருந்தேனற் போதியின் கீழே. (௧௦)

செல்கின்ற வாற்றிற் சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராம்
பல்கின்ற தேவ ரசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. (௧௧)

சித்தத்தி னுள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே யோதிய வேதத்தின்
ஒத்த வுடலையு முண்ணின்ற வுற்பத்தி
அத்த னெனக்கிங் கருளா லளித்ததே. (௧௨)

* நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்குவன்
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. (௧௩)

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுண் மந்திர மாலை
யுறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. (௧௪)

* அங்கி மிகாமைவைத் தானுடல் வைத்தான்
எங்கு மிகாமைவைத் தானுல கேழையுந்
தங்கி மிகாமைவைத் தான்றமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமைவைத் தான்பொரு டானுமே. (௧௫)

அடிமுடி காண்பா ரயன்மா லிருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
யடிகண் டிலேனென் றச்சுதன் சொல்ல
முடிகண்ட னென்றயன் பொய்மொழிந் தானே.



பெற்றமு மானு மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமு நல்கி யடியேன் சிரத்தினில்
நற்பத மும்மளித் தானெங்க ணந்தியே. (௧௭)

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
யாயத்தை யச்சிவன் றன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளங்கியிட் டேனே. (௧௮)

விளக்கிப் பரமாகு மெய்ஞ்ஞானச் சோதி
யளப்பில் பெருமைய னானந்த நந்தி
துளக்கறு மானந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பிற் கயிலை வழியில்வந் தேனே. (௧௯)

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி யருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி யருளாலே மெய்ஞ்ஞானத் துண்ணினேன்
நந்தி யருளாலே நானிருந் தேனே. (௨௦)

இருக்கி லிருக்கு மெண்ணிலி கோடி
யருக்கின்ற மூலத்து ளங்கே யிருக்கும்
அருக்கனுஞ் சோமனு மாரழல் வீச
உருக்கிய ரோம மொழிவிடுந் தானே. (௨௧)

பிதற்றுகின் றேனென்று மப்பேர்நந்தி தன்னை
யியற்றுவ னெஞ்சத் திரவும் பகலு
முயற்றுவ னோங்கொளி வண்ணனெம் மானை
யியற்றிகழ் சோதி யிறைவனு மாமே. (௨௨)

## அவையடக்கம்.

* ஆரறி வாரெங்க ளண்ணல் பெருமையை
யாரறி வாரிந்த வகலமு நீளமும்
பேரறி யாத பெருஞ்சுட ரொன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. (௧)

பாடவல் லார்நெறி பாட வறிகிலேன்
ஆடவல் லார்நெறி யாட வறிகிலேன்
நாடவல் லார்நெறி ஞான மறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. (௨)

* மன்னிய வாய்மொழி யாலு மதித்தவர்
இன்னிசை யுள்ளே யெழுகின்ற வீசனைப்
பின்னை யுலகம் படைத்த பிரமனும்
உன்னு மவனை யுணரலு மாமே. (௩)

தத்துவ ஞான முரைத்துத் தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறு யிருந்து துதிசெயும்
பத்திமை யானிப் பயனறி யாரே. (௪)

## திருமந்திரத் தொகைச்சிறப்பு.

* மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞால மறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. (௧)

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்பு தருமிவை தானே. (௨)



## குருமட வரலாறு.

வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி யுதிக்கின்ற மூலன் மடவரைத்
தந்திர மொன்பது சார்வுமூ வாயிரஞ்
சுந்தர வாகமச் சொன்மொழிந் தானே. (௧)

கலந்தருள் காலாங்கர் தம்பாற் கோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. (௨)

## திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை.

அளவில் இளமையு மந்தமு மீறும்
அளவியல் காலமு நாலு முணரிற்
றளர்விலன் சங்கரன் றன்னடி யார்சொல்
அளவில் பெருமை யரியயற் காமே. (௧)

* ஆதிப் பிரானு மணிமணி வண்ணனு
மாதிக் கமலத் தலர்மிசை யாயனுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியி லொன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே. (௨)

ஈச னிருக்கு மிருவினைக் கப்புறம்
பீச முலகிற் பெருந்தெய்வ மானது
வீச னதுவிது வென்பார் நினைப்பிலார்
தூச பிடித்தவர் தூரறிந் தார்களே. (௩)

சிவமுதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுத லாறிரண் டொன்றொடொன் றாகும்

அவைமுதல் விந்துவு நாதமு மோங்கச்
சவைமுதற் சங்கரன் றன்பெயர் தானே. (௪)

பயனறிந் தவ்வழி யெண்ணு மளவில்
அயனொடு மானமக் கண்ணிய மில்லை
நயனங்கள் மூன்றுடை நந்தித் தமராம்
வயன்பெறு வீரவ் வானவ ராலே. (௫)

ஓலக்கஞ் சூழ்ந்த வலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்றொழ
மாலுக்கு மாதிப் பிரமற்கு மொப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. (௬)

வானவ ரென்று மனிதரிவ ரென்றுந்
தேனமர் கொன்றைச் சிவனரு ளல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வ மற்றில்லை
ஊனமர்ந் தோரை யுணர்வது தானே. (௭)

* சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
வாதிக்கு ளாவ தறிகிலா தார்கள்
நீதிக்க ணீச னெடுமா லயனென்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே. (௮)

பரத்திலே யொன்றா யுள்ளாய்ப் புறமாகி
வரத்தினுண் மாயவ னாயய னாகித்
தரத்தினுட் டான்பல தன்மைய னாகிக்
கரத்தினு ணின்று கழிவுசெய் தானே. (௯)

தானொரு கூறு சதாசிவ னெம்மிறை
வானொரு கூறு மருவியு மங்குளன்
கோனொரு கூறுட லுண்ணின் றுயிர்க்கின்ற
தானொரு கூறு சலமய னாமே. (௧௦)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.



## முதற்றந்திரம் - உபதேசம்.

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியோ ரொப்பிலா வானந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. (௧)

களிம்பறுத் தானெங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தானருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. (௨)

* பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே. (௩)

வேயி னெழுங்கனல் போலேயிம் மேனியுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோனந்தி
தாயினு மும்மல மாற்றித் தயாவென்னுந்
தோயம தாயெழுஞ் சூரிய னாமே. (௪)

* சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
சூரியன் றோற்றமு னற்ற மலங்களே. (௫)

மலங்களைந் தாமென மாற்றி யருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினு ணந்தியே
நலங்களைந் தானுள் ளயர்ந்தா னறிந்தே. (௬)

அறிவைம் புலனுட னேநான் றதாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல

அறிவறி வுள்ளே யழிந்தது போல
குறியறி விப்பான் குருப ரனாமே. (௭)

ஆமேவு பாலைப் பிறிக்கின்ற வன்னம்போற்
றாமே தனியன்றித் தன்னைத் தனிவித்தத்
தீமேவு பல்கர ணங்களு ளுற்றன
தாமே பிறப்பெரி சேர்ந்தவித் தாமே. (௮)

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற்று
ஒத்துப் புலனுயி ரொன்றா யுடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யர்களே. (௯)

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துட்புக்குத் தன்னொளி தாய
தவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே. (௧0)

அளித்தா னுலகெங்குந் தானான வுண்மை
அளித்தா னமரா வறியா வுல[illegible]
அளித்தான் றிருமன்று ளாடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே. (௧௧)

* வெளியின் வெளிபோய் விரவிய வாறும்
அளியி னளிபோ யடங்கிய வாறும்
ஒளியி னொளிபோ யொடுங்கிய வாறுந்
தெளியு மவரே சிவசித்தர் தாமே. (௧௨)

* சித்தர் சிவலோக மிங்கே தரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முட்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்த முத்தி முதல்முப்பத் தாறே. (௧௩)

* முப்பது மாறும் படிமுத்தி யேணியாய்
ஒப்பிலா வானந்தத் துள்ளொளி புக்குச்



செப்ப வரிய சிவங்கண்டு தான்றெளிந்
தப்பரி சாக வமர்ந்திருந் தாரே. (௧௪)

இருந்தார் சிவமாகி யெங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செய லியாவையு நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தா ரிழவுவந் தெய்திய சோம்பே. (௧௫)

சோம்ப ரிருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே
சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கட் டூக்கமே. (௧௬)

* தூங்கிக்கண் டார்சிவ லோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்சிவ யோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார்நிலை சொல்வதெவ் வாறே. (௧௭)

எவ்வாறு காண்பா னறி[illegible]னக் கெல்லை
அவ்வா றருட்செய்ய ஞானியான் றானும்
ஒவ்வாத மன்று ளுமைகாண வாடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம். (௧௮)

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினு ளாடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. (௧௯)

பெற்றா ருலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றா ருலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றா ரம்மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றா ருலகுடன் பேசாப் பெருமையே. (௨0)

பெருமை சிறுமை யறிந்தெம் பிரான்போல்
அருமை யெளிமை யறிந்தறி வாரார்

ஒருமையு ளாமைபோ லுள்ளைந் தடக்கி
இருமையுங் கேட்டிருந் தார்புரை யற்றே. (உக)

புரையற்ற பாலினு ணெய்கலந் தாற்போற்
றிரையற்ற சிந்தைநல் லாரியனென் செப்பு
முரையற் றுணர்வோ ருடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே. (உஉ)

சத்தமுத லைந்துந் தன்வழித் தான்சாரிற்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்தவெளி யிற்சுட ரிற்சுடர் சேரு
மத்த மிதுகுறித் தாண்டுகொ ளப்பிலே. (உங)

* அப்பினிற் கூர்மை யாதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த வவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்து ளடங்குமே. (உச)

அடங்குபே ரண்டத் தணுவண்டஞ் சென்றங்
கிடங்கொண்ட தில்லை யிதுவன்றி வேறுண்டோ
கடந்தொறு நின்ற வுயிர்கரை காணிற்
றிடம்பெற நின்றான் றிருவடி தானே. (உரு)

* திருவடி யேசிவ மாவது தேரிற்
றிருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கிற்
றிருவடி யேசெல் கதியது செப்பிற்
றிருவடி யேதஞ்ச முட்டெளி வார்க்கே. (உசா)

தெளிவு குருவின் றிருமேனி காண்டல்
தெளிவு குருவின் றிருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் றிருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்த றானே. (உஎ)

தானே புலனைந்துந் தன்வச மாயிடுந்
தானே புலனைந்துந் தன்வசம் போயிடுந்
தானே புலனைந்துந் தன்னில் மடைமாறுந்
தானே தனித்தெம் பிரான்றனைச் சந்தித்தே. (உஅ)

சத்திப் பராசத்தி தன்றிருத் தாளிணை
சத்திப் பராசத்தி செய்ய திருமேனி
சத்திப் பராசத்தி நாமமென் வாய்மையாற்
புத்திக்குள் நிற்பது சத்திபொற் போதமே. (உகூ)

போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினர்
நாதன் நடத்தா லயனம் பணிகூர
வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே. (௩௦)

## யாக்கை நிலையாமை.

* மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீவினைச் சேர்ந்தது
விண்ணின் றுநீர்விழின் மீண்டு மண்ணானாற்போல்
எண்ணின்றி மாந்த ரிறக்கின்ற வாறே. (க)

* பண்டம்பெய் கூரை பழகி விழுதலால்
உண்டவப் பெண்டிரு மக்களும் பின்செலார்
கொண்ட விரதமு ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே. (உ)

* ஊரெலாங் கூடி யொலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. (ங)

கூடு மிரண்டு முகட்டல கொன்றுள
ஆறு மிரண்டு முப்பத் திரண்டுள
பாறு மரக்கழி முப்பத் திரண்டுள
மேறு மகூரை பிரியும் பிரிந்தபின்
போறுயிர் மீளப் புகலறி யாதே. (ச)

சீக்கை விளைந்தது செய்வினை மூட்டற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைப் பலியிட்டுக் கைகொட்டு மாறே. (ரு)

அடப்பண்ணி வைத்தா ரடிசிலை யுண்டார்
மடக்கொடி யாரொடு மந்தனங் கொண்டார்
இடப்பக்க மேயிறை நொந்ததே யென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே. (சு)

மன்றத்தே நம்பிக்கு மாட மெடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்றத்தா வென்று இருந்திலன் றானே. (எ)

வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய வழுதிட்டுப்
பாசந்தி சுட்டுப் பலியட்டி னார்களே. (அ)

கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண் ணுமைவரும் போயினர்
மையிட்ட கண்ணாளு மாடு மிருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. (கூ)

* பந்தற் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலு மொக்க வடைத்தன
துன்புறு காலத் துரிசவா மேன்மேல்
அன்புடை யார்க ளழுதகன் றார்களே. (கo)

நாட்டுக்கு நாயக னம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. (கக)



* முப்பது முப்பது முப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயிற் சிதைந்தபின்
ஒப்ப வனைவரு மோட்டெடுத் தாரே. (கஉ)

மதுவூர் குழலியு மாடு மனையு
மிதுவூ ரொழிய விமானம் தேறிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
அதுவூர் வாங்கியே வைத்தகன் றாரே. (கங)

வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடு மரும்பொருள்
இச்சது வாய்ப்பின் றொடர்வுறு மற்றவர்
எச்சக லாநின் றிளைக்கின்ற வாறே. (கச)

* ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரு மக்களும்
ஊர்த்துறை காலே யொழிவ தொழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே. (கரு)

* வளத்திடை முற்றத்தோர் மாநில முற்றுங்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தாலவை யோடென்று வைப்பர்
உடலுடைந் தாலின்றப் போதும் வையாரே. (கசு)

ஐந்து தலைப்பறி யாறு சடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலு மொன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே. (கஎ)

அத்திப் பழமு மறைக்கிளை நல்வித்துங்
கொத்தி யுலைப்பெய்து கூறிட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை யறைக்கிரை வித்துண்ணக்
கத்தி யெடுத்தவர் காடுபுக் காரே. (கஅ)

மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலு மிரண்டு முகட்டல கொன் றுண்டு
வோலையான் மேய்ந்தவா யூடு வரிதமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே. ()

கூடங் கிடந்தது கோலங்க ளிங்கில்லை
ஆடு மிலையமு மற்ற தறுதலும்
பாடுகின் றார்சிலர் பண்ணி லழுதிட்டுத்
தேடியே தீயினிற் றீயவைத் தார்களே. (௨௦)

* முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை யேதேனு மேழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேட்டறி யீரே. (௨௧)

இடிஞ்சி லிருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவ தறியா வுலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே. (௨௨)

* மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலு முயிரு முருவந் தொழாமல்
இடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்படர் வெந்தமர் கூப்பிடு மாறே. (௨௩)

குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண்
டிடையுமக் காலு மிருந்து நடுவே
புடையு மனிதனுற் போகுமப் போது
வடையு மிடம்வல மாருயி ராமே. (௨௪)

* காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே. (௨௫)



## செல்வ நிலையாமை.

* அருளு மரசரு மானையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளு முயிரொடுஞ் செல்வனைச் சேரின்
மருளும் பினையவன் மாதவ மன்றே. (௧)

இயக்குறு திங்க ளிருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே. ()

* தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்க ளேழைகள்
உன்னுயிர் போமுட லொக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. (௩)

* ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமுங்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரத்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தவை கைவிட்ட வாறே. (௪)

தேற்றத் தெளிமின் றெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறித்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே. (௫)

மகிழ்கின்ற செல்வமு மாடு முடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற வாக்கைக் கோர்வீடு பேறாகச்
சிமிழொன்றில் வைத்தமை தேர்ந்தறி யாரே. (௬)

வாழ்வு மனைவியு மக்க ளுடன்பிறந்
தாரு மளவே தனக்கென்ப ரொண்பொருண்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூறலு மாமே. * (எ)

*வேட்கை மிகுத்தது மெய்கொள்வா ரிங்கில்லை
பூட்டுந் தறியொன்று போம்வழி யொன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. (அ)

உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
வடம்பரி சொன்றில்லை யண்ணலை யெண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்நமன் றூதர்
சுடும்பரி சத்தையுஞ் சூழகி லாரே. (கூ)

## இளமை நிலையாமை.

*கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே. (க)

* ஆண்டு பலவுங் கழிந்தன வப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வாரில்லை
நீண்டன காலங்க ளீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யார்களே. (உ)

தேய்ந்தற் றொழிந்த விளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை யரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளு முலாவுள்ள போதே. (ங)



விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை யாயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயுமொத் தேனே. (ச)

* பாலனி ளையன் விருத்த னெனநின்ற
காலங் கழிவன கண்டு மறிகிலார்
ஞாலங் கடந்தண்ட மூடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவ னானே. (ரு)

காலை யெழுந்தவர் நித்தலு நித்தலு
மாலை படுவதும் வாணாட் கழிவதுஞ்
சாலுமவ் வீசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. (சா)

பருவூசி யைந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி யைந்தும் பறக்கும் விருகம்
பருவூசி யைந்தும் பனித்தலைப் பட்டாற்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே. (எ)

கண்ணனுங் காய்கதி ரோனு முலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்று மறிகிலார்
விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்
எண்ணுறு முப்பதி லீர்க்கொழிந் தாரே. (அ)

ஒன்றிய வீரெண் கலையு முடன்றன
நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. (கூ)

* எய்திய நாளி லிளமை கழியாமை
எய்திய நாளி லிசையினு லேத்துமின்
எய்திய நாளி லெறிவ தறியாமல்
எய்திய நாளி லிருந்துகண் டேனே. (கய)

## உயிர் நிலையாமை.

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லா மிறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி யெம்பெரு மானடி யேத்தார்
அழைக்கின்ற போதறி யாரவர் தாமே. (௧)

ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரு மச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயக னோலை வருதலால்
ஐவரு மச்செய்யைக் காவல்விட் டாரே. (௨)

* மத்தளி யொன்றுள தாளி ரண்டுள
அத்துள்ளே வாழு மரசரு மஞ்சுள
அத்துள்ளே வாழு மரசன் புறப்பட்டான்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே. (௩)

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கட மென்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே. (௪)

சென்றுணர் வான்றிசை பத்துந் திவாகரன்
அன்றுணர் வாலளக் கின்ற தறிகிலர்
நின்றுண ராரிந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே. (௫)

ஊறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரில்லை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவதும்
ஈறும் பிறப்புமோ ராண்டெனு நீரே. (௬)



துடுப்பிடு பானைக்கு மொன்றே யரிசி
அடுப்பிடு மூன்றிற்கு மஞ்சேரி கொள்ளி
அடுத்தெரி யாமற் கொடுமின் னரிசி
விடுத்தன நாட்களு மேற்சென் றனவே. (௭)

* இன்புறு வண்டங் கினமலர் மேற்போ
யுண்பது வாச மதுபோ லுயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலு மூன்றொளி
கண்புற நின்ற கருத்துணில் லானே. (௮)

ஆம்விதி நாடி யறஞ்செய்மி னங்கிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டுமெ தென்சொல்லின் மானுடர்
ஆம்விதி பெற்ற வருமைவல் லார்க்கே. (௯)

* அவ்வியம் பேசி யறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் றலைப்பட்ட போதே. (௧0)

---

## கொல்லாமை.

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோ ரணுக்களைக் கொல்லாமை யொண்மலர்
கற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமு
முற்றாரு மாவி யமர்ந்திட முச்சியே. (௧)

* கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே. (௨)

## புலால் மறுத்தல்.

* பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண வியமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. (௧)

* கொலையே களவுகட் காமம் பொய்கூறல்
மலைவான பாதக மீரமவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையா மிவைஞானா னந்தத் திருத்தலே. (௨)

## பிறர்மனை நயவாமை.

* ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. (௩)

* திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
யருத்தமென் றெண்ணி யறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே. (௪)

பொருள்கொண்ட கண்டனும் போதத்தை யாளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றோரு
மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே.

## மகளிரிழிவு.

* இலைநல வாயினு மெட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா



முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலைநல நெஞ்சினை வைய்துகொள் ளீரே. (௧)

* மனைபுகு வார்கண் மனைவியை நாடிக்
கனைபுகு தீர்போற் கழித்துடன் வாங்கும்
தனைவது போலக் கசிந்தெழு மன்பை
நனைவது போலவு நாடவொண் ணாதே. (௨)

இயலுறும் வாழ்க்கை யிளம்பிடி மாதர் *
புயலுறும் புல்லிற் புணர்ந்தவ ரேயினு
மயலுறும் வானவர் சார விருமென்பார்
அயலுறப் பேசி யகன்றொழிந் தாரே. (௩)

* வையகத் தேமட வாரொடுங் கூடியென்
மெய்யகத் தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொண்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே. (௪)

கோழை யொழுக்கங் குளமூடு பாசியில்
ஆழ நடுவா ளளப்புறு வார்களைத்
தாழத் திடக்கித் தடுக்ககில் லாவிடிற்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. (௫)

## நல்குரவு.

* புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களு மன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டி லியங்குகின் றார்கட்கே. (௧)

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்
றக்குழி தூர்க்கு மரும்பண்டந் தேடுவீர்

எக்குழி தூர்த்து மிறைவனை யேத்துமின்
அக்குழி தூரு மழுக்கற்ற போதே. (௨

கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கு மரியது
அக்குழி தூர்க்கு மறிவை யறிந்தபின்
அக்குழி தூரு மழுக்கற்ற வாறே. (௩

* துடர்ந்தெழுஞ் சுற்றம் வினையிலுந் தீய
கடந்ததோ ராவி கழிவதன் முன்னே
யுடன்றொரு காலத் துணர்விளக் கேற்றித்
துடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே. (௪

அறுத்தன வாறினு மானின மேவி
அறுத்தனை ரைவரு மெண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை யொன்றல்ல வாழ்வை
வெறுத்தன னீசனை வேண்டிநின் றேனே. (௫)

## அக்கினிகாரியம்.

* வசையில் விழுப்பொருள் வானு நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா வந்தணை ராகுதி வேட்கிலே. (௧)

ஆகுதி வேட்கு மருமறை யந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாழ்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே. (௨)

அணைதுணை யந்தண ரங்கியு ளங்கி
அணைதுணை வைத்ததி னுட்பொரு ளான



இணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே. (௩)

போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. (௪)

நெய்நின் றெரியு நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்தரு மத்தின மாமென்றுஞ்
செய்கின்ற செல்வ மதியது வாமே. (௫)

பாழி யகலு மெரியுந் திரிபோலிட்
டூழி யகலு முறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி யுதிக்க வவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே. (௬)

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
வருஞ்செல்வந் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
பருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே. (௭)

ஒண்சுட ரானை யுலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி யென்னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோனுல கேழுங் கடந்தவன்
தண்சுட ரோமத் தலைவனு மாமே. (௮)

ஓமத்து ளங்கியி னுள்ளுள னெம்மிறை
யோமத்து ளங்கி யிதங்கொள் வானுளன்
வேமத்து ளங்கி விளைவு வினைக்கட்டற்
றோமத்து ளங்கி குளாகட றேனே. (௯)

அங்கி நிறுத்து மருந்தவ ராரணத்
தங்கி யிருக்கும் வகையருள் செய்தவர்
எங்கு நிறுத்தி யிளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே. (௧௦)

---

## அந்தணரொழுக்கம்.

* அந்தண ராவோ ராறுதொழிற் பூண்டுளோர்
செந்தழ லோம்பிமுப் போது நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியு மோதிச் சடங்கறுப் போர்களே. (௧)

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
யீதா மெனுதகண் டின்புறு வோர்களே. (௨)

* காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத் தேரேறி நிலைவுற்று நேயத்தாய்
மாயத்துட் டோயா மறையோர் கடாமே. (௩

* பெருநெறி யான பிரணவ மோர்ந்து
குருநெறி யாலுரை கூடினல் வேதத்
திருநெறி யான கிரியை யிருத்திச்
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே. (௪

சத்திய முந்தவந் தானவ னாதலும்
எய்த்தகு மிந்திய மீட்டியே வாட்டலும்
ஒத்த வுயிருட னுண்டா யுணர்வுற்றுப்
பெத்த மறுத்தலு மாகும் பிரமமே. (௫



* வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. (௬)

* நூலுஞ் சிகையு நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம்
நூலுடை யந்தணர் காண நுவலிலே. (௭)

* சத்திய மின்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடயம்விட் டோரு முணர்வின்றிப்
பத்தியு மின்றிப் பரனுண்மை யின்றியூண்
பித்தேறு மூடர் பிராமண ராமன்றே. (௮)

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரியச் சமாதியாந் தூய்மறை யோர்க்கே. (௯)

* மறையோ ரவரே மறையவ ராகில்
மறையோர்தம் வேதாந்த வாய்மையிற் றூய்மை
குறையோர்தல் மற்றுள்ள கோலா கலமென்
றறிவோர் மறைதெரிந் தந்தண ராமே. (௧௦)

அந்தண்மை பூண்ட வருமறை யந்தத்துச்
சிந்தைசெய் யந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துத லில்லை நரபதி நன்றாகும்
அந்தியுஞ் சந்தியு மாகுதி பண்ணுமே. (௧௧)

வேதாந்த ஞானம் விளங்கி விதியிலோர்
நாதாந்த போத மணுகிய போகத்துப்
போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்
நாதாந்த முத்தியுஞ் சித்தியு நண்ணுமே. (௧௨)

ஒன்று மிரண்டு மொடுங்கிய காலத்து
நன்று மிருந்து நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. (சந)

தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடைப்படு மேதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணியபோகனாய்
ஓமேவு மோமா குதியவி யுண்ணவே. (சச)

---

## இராசதோடம்.

* கல்லா வரசனுங் காலனு நேரொக்குங்
கல்லா வரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலி னணுகுகில் லானே. (க)

* நாடோறு மன்னவ னாட்டிற் றவநெறி
நாடோறு நாடி யவனெறி நாடானேல்
நாடோறு நாடு கேடுமுட னண்ணுமால்
நாடோறுஞ் செல்வ நரபதி குன்றுமே. (உ)

* வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடமே மெய்வேடம்
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. (ந)

மூடங் கெடாதோர் சிகைநூன் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
ஈடொன் றிலனாகு மாதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தானன்றே. (ச)



* ஞானமி லாதார் சடைசிகை நூனண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குத னலமாகு நாட்டிற்கே. (ரு)

* ஆவையும் பாவையு மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேன்
மேவு மறுமைக்கு மீளா நரகமே. (சு)

* திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்து மறநெறி யேயாற்றல் வேண்டுஞ்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையு
மறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே. (எ)

வேந்த னுலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்க ளவ்வழி யாகிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவசத் தானே. (அ)

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி யுண்ணாதோர்
மால்கொண்டு தேறலை யுண்ணு மருளரை
மேல்கொண்டு தண்டஞ் செய்வேந்தன் கடனே. (கூ)

* தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன வாகம நூனெறி
எத்தண் டமுஞ்செயு மம்மையி லிம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. (கo)

---

## வான்சிறப்பு.

* அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்

கழுகூறு தேங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை யாங்கது வாகுமே. (௧)

வரையிடை நின்றிழி வானீ ரருவி
உரையில்லை யுள்ளத் தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை யெந்தைக் கழுமணி யாறே. (௨)

## தானச்சிறப்பு.

ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே. (௧)

## இரந்தார்க்கீதல்.

* தாமறி வாரண்ண றாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்க
டாமறி வார்க்குத் தமர்பர னாமே. (௧)

* யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. (௨)

அற்றுநின் றாருண்ணு மூணே யறமென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயனறி யாரே. (௩)



* அழுக்கினை யோட்டி யறிவை நிறையீர்
தழுக்கிய நாளிற் றருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
விழிக்கவன் றென்செய்வீ ரேழைநெஞ் சீரே. (௪)

தன்னை யறியாது தானல்லன் என்னாது
இன்மை யறியா திளையரென் றோராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்
தன்மையு நல்ல தவஞ்செய்யு நீரே. (௫)

துறந்தான் வழிமுதற் சுற்றமு மில்லை
இறந்தான் வழிமுதல் இன்பமு மில்லை
மறந்தான் வழிமுதல் வந்தில னீசன்
அறந்தா னறியு மளவறி வாரே. (௬)

* தான்றவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி
மான்றெய்வ மாக மதிக்கு மனிதர்கள்
ஊன்றெய்வ மாக வுயிர்க்கின்ற பல்லுயிர்
நான்றெய்வ மென்று நமன்வரு வானே. (௭)

திளைக்கும் வினைக்கடற் றீர்வுறு தோணி
இளைப்பின்றி நீக்கு மிருவழி யுண்டு
கிளைக்குந் தனக்குமக் கேடில் புகழோன்
விளைக்குந் தவமற மேற்றுணை யாமே. (௮)

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்ற முரையா னறநெறிக் கல்லது
உற்றுங் களாலொன்று மீந்தது வேதினை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. (௯)

## அறஞ்செயான்றிறம்.

* எட்டி பழுத்த விருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்

வட்டிகொண் டீட்டியே மண்ணினின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயனறி யாரே. (௧)

ஒழிந்தன காலங்க ளூழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிட ராக்கை
அழிந்தன கண்டு மறமறி யாரே. (௨)

* அறமறி யாரண்ணல் பாத நினையுந்
திறமறி யார்சிவ லோக நகர்க்குப்
புறமறி யார்பலர் பொய்மொழி கேட்டு
மறமறி வார்பகை மன்னிநின் றாரே. (௩)

* இருமலுஞ் சோகையு மீளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகு
முருமிடி நாக மூரோணி கழலைத்
தருமஞ்செய் வார்பக்கற் றுழுகி லாவே. (௪)

* பாவப் படுவார் பரமனை யேத்தார்
இரவலர்க் கீதலை யாயினு மீயார்
கரகத்தே நீரோட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தி னிற்றிரோ நன்னெஞ்சி னீரே. (௫)

வழிநடப் பாரின்றி வானோ ருலகங்
கழிநடப் பார்நடந் தார்கரும் பாரு
மழிநடக் கும்வினை மாசற வோட்டிட்
டொழிநடப் பார்வினை யோங்கிநின் றாரே. (௬)

* கனிந்தவ ரீசன் கழலடி காண்பர்
துணிந்தவ ரீசன் றுறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. (௭)



இன்ப மிடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பு மதுகண்டு மீகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை யறமறி யாரே. (௮)

* கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடுவல்லீ செய்தின்ப நாட்டவு மொட்டான்
இடுவது மீவது மெண்ணுமி னின்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே. (௯)

செல்வங் கருதி சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராதே
இல்லங் கருதி யிறைவனை யேத்துமின்
வில்லி யிலக்கெய்த வீற்குறி யாமே. (௰)

---

## அன்புடைமை.

* அன்பு சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. (௧)

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரு மிளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. (௨)

* என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை யெய்தவொண் ணாதே. (௩)

ஆர்வ முடையவர் காண்ப ரரன்றன்னை
ஈர முடையவர் காண்ப ரிணையடி
பார முடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெருக்கொடு கொங்குபுக் காரே. (௪)

என்னன் புருக்கி யிறைவனை யேத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. (௫)

தானொரு காலஞ் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேனொரு பாற்றிகழ் கொன்றை யணிசிவன்
றானொரு வண்ணமெ னன்பினின் றானே. (௬)

முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
அன்படைத் தெம்பெரு மானை யறிகிலார்
வன்படைத் திந்த வகலிடம் வாழ்வினில்
அன்படைத் தான்ற னகலிடந் தானே. (௭)

கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்து மிறைவனென் றேத்தியும்
அருத்தியு ளீசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடு விண்ணவர் கோனே. (௮)

நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்
வைத்த பரிசறிந் தேயு மனிதர்கள்
இச்சையு ளேவைப்ப ரெந்தை பிரானென்று
நச்சியே யண்ணலை நாடுகி லாரே. (௯)

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி யமரு மரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே யணைதுணை யாமே. (௰)



## அன்புசெய்வாரை யறிவன்சிவன்.

* இகழ்ந்ததும் பெற்றது மீச னறியும்
உகந்தருள் செய்திடு முத்தம னாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. (௧)

இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல வென்னினும்
வன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பிப் பிறவி முடிவது தானே. (௨)

அன்புறு சிந்தையின் மேலெழு மவ்வொளி
இன்புறு கன்னியொ டேற விசைந்தன
துன்புறு கன்னியைந் தாடுந் துடக்கற்று
அன்புறு சிந்தையை நாடுமி னீரே. (௩)

* புணர்ச்சியு ளாயிழை மேலன்பு போல
உணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லார்க்குக்
குணர்ச்சியில் லாது குலாவி யுலாவி
அணைத்த தணைத்தின்ப மதுவிது வாமே. (௪)

* உற்றுநின் றாரொடு மத்தகு சோதியைச்
சித்தர்க ளென்றுந் தெரிந்தறி வாரில்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே. (௫)

* கண்டேன் கமழ்தரு கொன்றையி னானடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் கழலதெ னன்பினுள் யானே. (௬)

நம்பனை நாளு விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவ ரோதுந் தலைவனை

இன்பனை யின்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரு மறியகி லாரே. (௭)

முன்பு பிறப்பு மிறப்பு மறியாதார்
அன்பி லிறைவனை யாமறி யோமென்பர்
இன்பப் பிறப்பு மிறப்பு மிலாநந்தி
அன்பி லவனை யறியகி லாரே. (௮)

* ஈசனறியு மிராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை யீட்டிநின் றானே. (௯)

விட்டுப் பிடிப்பதென் மேதரு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் றலையாப் பெருமையை
எட்டுமென் னுருவி லாய்நின்ற வீசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. (௧௦)

---

## கல்வி.

குறிப்பறிந் தேனுட லுயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே. (௧)

* கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர்க் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி யுரைசெய்யும்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே. (௨)

* நிற்கின்ற போதே நிலையுடை யான்கழற்
கற்கின்ற செய்யின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்ற லின்றித் தொழுமின் றொழுதபின்
மற்றொன் றிலாத மணிவிளக் காமே. (௩)



கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்
பல்லி யுடையார் பாம்பரிந் துண்கின்றார்
எல்லியுங் காலையு மேத்து மிறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே. (௪)

* துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லார்
துணையது வாய்வருந் தூமலர்க் கந்தந்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே. (௫)

* நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்று பற்றினாற் கூடாப் பறவைகண்
மாலொன்று பற்றி மயங்குகின் றாரே. (௬)

ஆய்ந்துகொள் வார்க்கர னங்கே வெளிப்படுந்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
ஏய்ந்த வினைமதி யெட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே. (௭)

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாமும் பாமுல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே. (௮)

* பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது வெல்லா முதல்வ னருள்பெறில்
இற்ற விராகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்ப முற்றுநின் றாரே. (௯)

கடலிடை யான்மலை யானைந்து பூதத்
துடலிடை யான்பல வூழிதொ றூழி
அடல்விடை யேறு மமரர்க ணாதன்
இடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே. (௧௦)

## கேள்விகேட்டமைதல்.

அறங்கேட்டு மந்தணர் வாய்மொழி கேட்டு
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் மீசன்
றிறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. (௧)

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவ ரொருவ ரறிவா ரறிந்தபின்
ஓதுமின் கேண்மி னுணர்மி னுணர்ந்தபின்
ஓதி யுணர்ந்தவ ரோங்கிநின் றாரே. (௨)

* மயன்பணி கேட்பது மாநந்தி கேட்பின்
அயன்பணி கேட்ப தான்பணி யாலே
சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே. (௩)

* பெருமா னிவனென்று பேசி யிருக்குந்
திருமா னிடர்பின்னைத் தேவரு மாவர்
அருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்
அருமா தவத்தெங்க ளாதிப் பிரானே. (௪)

ஈச னருளு மிறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி
நேசமு மாகு நிகழொளி யாய்நின்று
வாச மலர்க்கந்த மன்னிநின் றானே. (௫)

விழுப்பங் கெழுமிய மெய்நின்ற ஞானத்
தொழுக்கமுஞ் சிந்தை யுணர்கின்ற போது
வழுக்கி விடாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி யெண்ணிலி காலம தாமே. (௬)

சிறியார் மணற்சோற்றிற் றேக்கிடு மாபோற்
செறிவா லனுபோகஞ் சித்திக்கு மென்னிற்



குறியாத தொன்றைக் குறியாதார் தம்மைக்
அறியா திருந்தா ரவரவ ரன்றே. (௭)

* உறுதுணை யாவ துயிரு முடம்பும்
உறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே. (௮)

* புகழநின் றார்க்கும் புராணனெம் மீசன்
இகழநின் றார்க்கு மிம்மைக் கிடமா
மகிழநின் றாதியை யோதி யுணராக்
கழியநின் றார்க்கொரு கற்பக வாமே. (௯)

வைத்துணர்ந் தான்மனத் தோடும் வாய்பேசி
ஒத்துணர்ந் தானுரு வொன்றோடொன் றொவ்வா
அத்தழன் றணி கலங்கினு மாதியை
கைத்துணர்ந் தார்க்கே நணுகலு மாமே. (௧௦)

## கல்லாமை.

* கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லா ரெனிலருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாத ருண்மைபற் றாநிற்பர் கற்றோருங்
கல்லாதார் பேரின்பங் காணுகி லாரே. (௧)

* வல்லார்க ளென்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லா தவர்க ளறிவு பலவென்பார்
எல்லா விடத்து முளனெங்க டம்மிறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே. (௨)

* நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்

எல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே. (௩)

இல்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்
கல்லே னரனெறி யறியாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்
கல்லேன் கழியநின் றாடவல் லேனே. (௪)

* நில்லாது சீவ னிலையன்றென் றெண்ணி
வல்லா றறத்துந் தவத்துளு மாயினார்
கல்லா மனிதர் கயவ ருலகினிற்
பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே. (௫)

விண்ணினி னுள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினி னுள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினி னுள்ளே மதித்து மதித்துநின்
றெண்ணி யெழுதி யிளைத்துவிட் டாரே. (௬)

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. (௭)

* கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராங்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. (௮)

* கற்றுஞ் சிவஞான மில்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பி னிற்போர் கணக்கறிந் தார்களே. (௯)



ஆதிப் பிரானம ரர்க்கும் பரஞ்சுடர்
சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி யுணரவல் லோமென்ப ருண்ணின்ற
சோதி நடத்துந் தொடர்வறி யாரே. (௰)

---

## நடுவுநிலைமை.

* நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானுநின் றேனே. (௧)

* நடுவுநின் றானல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றானல்ல நான்மறை யோதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே. (௨)

நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானுநின் றேனே. (௩)

தோன்றிய வெல்லாந் துடைப்ப னவனன்றி
என்றுநின் றானென்று மீச னிணையடி
மூன்றுநின் றார்முதல் வன்றிரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே. (௪)

---

## கள்ளுண்ணாமை.

கழுநீர்ப் பசுப்பெறின் கயந்தொறுந் தேரக்
கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கு

முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை யகன்றோர்
செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே. (௧)

சித்த முருக்கிச் சிவமாஞ் சமாதியில்
ஒத்துச் சிவானந்த தோவாத் தேறலைச்
சுத்த மதுவுண்ணச் சிவானந்தம் விட்டிடா
நித்த லிருத்தல் கிடத்தல்கீழ்க் காலே. (௨)

* காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகு
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனித னிணையடி
போமய வானந்தத் தேற லுணர்வுண்டே. (௩)

* வாமத்தோர் தாமு மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக் கள்ளுண்டே கலங்குவர்
ஓமத்தோ ருள்ளொளிக் குள்ளே யுணர்வார்கண்
ணாமத்தோ ரன்றே நணுகுவர் தாமே. (௪)

உள்ளுண்மை யோரா ருணரார் பசுபாசம்
வள்ளன்மை நாத னருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்
கள்ளுண்ணு மாந்தர் கருத்தறி யாரே. (௫)

மயக்குஞ் சமய மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தோரார்
மயக்குறு மாயையின் மாமாயை வீடு
மயக்கிற் றெளியின் மயக்குறு மன்றே. (௬)

மயங்குந் தியங்குங்கள் வாய்மை யழிக்கும்
இயங்கு மடவார் தம்மின்ப மேயெய்தி.
முயங்கு நயங்கொண்ட ஞானத் துறுந்தார்
இயங்கு மிடையறா வானந்த மெய்துமே. (௭)



இராப்பக லற்ற விடத்தே யிருந்து
பராக்கற வானந்தத் தேறல் பருகார்
இராப்பக லற்ற விறையடி யின்பத்
திராப்பகன் மாயை யிரண்டிடத் தேனே. (௮)

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி யழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னிற் றலைப்பட்டுச்
சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே. (௯)

* சத்த னருடரிற் சத்தி யருளுண்டாஞ்
சத்தி யருடரிற் சத்த னருளுண்டாஞ்
சத்தி சிவமா யிரண்டுந்தன் னுள்வைக்கச்
சத்தியு மெண்சித்தித் தன்மையு மாமே. (௧௦)

தத்துவ நீக்கி மருணீக்கித் தானாகி
பொய்த்தவ நீக்கிமெய்ப் போகத்துட் போக்கியே
மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே. (௧௧)

* யோகிகள் கால்கட்டி யொண்மதி யானந்த
போத வமுதைப் பொசித்தவ ரெண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்
றாறு மதந்தா லறிவழிந் தாரே. (௧௨)

உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறந்
தெண்ணீர் குரவ னிணையடித் தாமரை
நண்ணீர் சமாதியி னாடி னிரானலங்
கண்ணா றொடேசென்று கால்வழி காணுமே. (௧௩)

முதற்றந்திர முற்றிற்று.

பாடல் - ௩௩௯.

# இரண்டாந் தந்திரம்

## அகத்தியம்.

நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுக்கின்ற தெம்பெரு மானென்ன வீ
னடுவுள வங்கி யகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே. (௧)

அங்கி யுதயம் வளர்க்கு மகத்தியன்
அங்கி யுதயஞ்செய் மேல்பா லவனொடு
மங்கி யுதயஞ்செய் வடபாற் றவமுனி
எங்கும் வளங்கொள் ளிலங்கொளி தானே. (௨)

## பதிவலியில்வீரட்டமெட்டு.

கருத்துறை யந்தகன் றன்போ லசுரன்
வரத்தி னுலகத் துயிர்களை யெல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே. (௧)

கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேணுமென் றெண்ணித்
தலையைப் பரிந்திட்டுச் சந்திசெய் தானே. (௨)

எங்கும் பரந்து மிருநிலந் தாங்கியுந்
தங்கும் படித்தவன் றாளுணர் தேவர்கள்
பொங்கு சினத்து ளயன்றலை முன்னற
வங்கச் சதனை யுதிரங்கொண் டானே. (௩)



எங்குங் கலந்துமென் னுள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வ னருமறை யோன்பாற்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே. (௪)

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே. (௫)

முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னாவ தறிகிலர்
சத்திக் கருதிய தாம்பல தேவரும்
அத்தீயி னுள்ளெழுந் தன்று கொலையே. (௬)

மூலத் துவாரத்து மூளு மொருவனை
மேலைத் துவாரத்தின் மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமா யிருந்ததே. (௭)

இருந்த மனத்தை யிசைய விருத்திப்
பொருந்திய லிங்க வெளியது போக்கித்
திருந்திய காமன் செயலழி யத்தங்
கருந்தவ யோகங் கொறுக்கை யமர்ந்ததே. (௮)

## இலிங்கபுராணம்.

அடிசேர்வ னென்னவெம் மாதியை நோக்கி
முடிசேர் மலைமக னார்மக ளாகித்
திடமா தவஞ்செய்து தேவ ரறியப்
படியார வர்ச்சித்துப் பத்திசெய் தாளே. (௧)

* கிரிஒன்ற முப்புரஞ் சென்ற பிரானை
அரியனென் றெண்ணி யயர்வுற வேண்
பரிவுடை யாளர்க்குப் பொய்யல னீசன்
பரிவொடு நின்று பரிசறி வானே. (௪)

ஆழி வலங்கொண் டயன்மா லிருவரும்
வாழி வலஞ்செய்ய வொண்கட ராதியும்
ஆழி கொடுத்தன னச்சதற் கவ்வழி
வாழிப் பிரமற்கும் வாள்கொடுத் தானே. (௫)

தாங்கிய இருபது தோளுந் தடவரை
ஓங்க வெடுத்தவ னொப்பில் பெருவலி
ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
நீங்கா அருள்செய்தா னின்மலன் றானே. (௬)

* உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி
அறுவகை யானைந்து மாட்டத்தன் றாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே. (௭)

ஓடிவந் தெல்லா மொருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று
நாடி யிறைவா நமவென்று கும்பிட
ஈடில் புகழோ னெழுகவென் றானே. (௮)

---

## தக்கன் வேள்வி.

தந்தை பிரான்வெகுண் டான்றக்கன் வேள்வியை
வெந்தழ லூடே புறப்பட்ட விண்ணவர்
முந்திய பூசை முனிவர் முறைகெட்டுச்
சிந்தின ரண்ணல் சினஞ்செய்த போதே. (௧



சந்திசெய் கண்டெழு கின்றரி தானும்
எந்தை யிவனல்ல யாமே யுலகினிற்
பந்தஞ்செய் பாசத்து வீழ்ந்து நலஞ்செய்ய
அந்தி மலரு மருள்புரிந் தானே. (௨)

அப்பரி சேய னார்பதி வேள்வியுள்
அப்பரி சேயங்கி யதிசய மாகிலும்
அப்பரி சேய துநீர்மையை யுள்கலந்
தப்பரி சேசிவ னாலிக்கின் றானே. (௩)

அப்பரி சேயய னாமாற் றேவர்கள்
அப்பரி [redacted]
அப்பரி சங்கியு [redacted]
அப்பரி சாகி யலர்ந்திருந் தானே. (௪)

[redacted]ருந் தானென் றோர் துதிப்பக்
[redacted]
உவந்த பெருவழி [redacted]. (௫)

அரிபிர மன்றக்க னருக்க னுடனே
வருமதி வாலை வன்னிநல் லிந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனரு ளின்றி யழிந்தநல் லோரே. (௬)

செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவர்
விதிமந் திரத்தி னடுக்களைக் கோலிச்
செவிமந் திரஞ்செய்து தாமுற நோக்குங்
குவிமந் திரங்கொல் கொடியது வாமே. (௭)

நல்லார் நவகுண்ட மொன்பது மின்புறப்
பல்லா ரமரர் பரிந்தருள் செய்கென
வில்லால் வரையை விளங்கொளி கொற்றவன்
பொல்லா வசுரர்கள் பொன்றும் படிக்கே. (௮)

தெளிந்தார் கலங்கினும் நீகலங் காதே
அளிந்தாங் கடைவதெம் மாதிப் பிரானை
விளிந்தானத் தக்கனவ் வேள்வியை வீயக்
களிந்தாங் கருள்செய்த தூய்மொழி யானே. (௰)

---

## பிரளயம்.

கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்
திருவருங் கோவென் றிகல இறைவன்
ஒருவனு நீருற வோங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள்புரிந் தானே. (க)

அலைகட லூடறுத் தண்டத்து வானோர்
தலைவனென் னும்பெயர் தான்றலை மேற்கொண்
டுலகா ரழற்கண்டுள் ளேவிழா தோடி
அலைவாயில் வீழா மலஞ்சலென் றானே. (உ)

தண்கடல் விட்ட தமருந் தேவரும்
எண்கடல் சூழும் பிரானென் றிறைஞ்சுவர்
வண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. (௩)

சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
திகைத்ததெண் ணீரிற் கடலொலி யோசை
மிகைக்கொள வங்கி மிகாமைவைத் தானே. (௪)

பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்
விண்பழி யாது விருத்திகொண் டானே. (௫)

---



## சக்கரப் பேறு.

மால்போ தகனென்னும் வண்மைக் கிங்காரங்
கால்போதங் கையினோ டந்தரச் சக்கர
மேல்போக வெள்ளி மலையம ரர்பதிப்
பார்போக மேழும் படைத்துடை யானே. (க)

சக்கரம் பெற்றுநற் றாமோ தரன்றானும்
சக்கரந் தன்னைத் தரிக்கவொண் ணாமையால்
மிக்கரன் றன்னை விருப்புட னர்ச்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே. (உ)

கூறது வாகக் குறித்துநற் சக்கரங்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே. (௩)

தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பாற்
றக்கன்றன் வேள்வியிற் றாமோ தரன்றானுஞ்
சக்கரந் தன்னைச் சசிக்கவே மேல்விட
அக்கி யுமிழ்ந்தது வாயுக் கதத்திலே. (௪)

---

## எலும்புங் கபாலமும்.

எலும்புங் கபாலமு மேந்தி யெழுந்த
வலம்பன் மணிமுடி வானவ ராதி
எலும்புங் கபாலமு மேந்தில னாகில்
எலும்புங் கபாலமு மிற்றுமண் ணாமே. (க)

---

## அடிமுடிதேடல்.

பிரமனு மாலும் பிரானேநா னென்னப்
பிரமன்மா றங்கட்பே தமைமை யாலே
பரம னனலாய்ப் பரந்துமுன் னிற்க
அரனடி தேடி யரற்றுகின் றாரே. (௧)

ஆமே முலகுற நின்றவெம் மண்ணலுந்
தாமே முலகிற் றழற்பிழம் பாய்நிற்கும்
வானே முலகுறு மாமணிக் கண்டனை
நானே யறிந்தேன வனுண்மையி னாலே. (௨)

ஊனா யுயிரா யுணர்வங்கி யாய்முன்னஞ்
சேணாய்வா னோங்குந் திருவுரு வேயண்டத்
தாணுவு ஞாயிறுந் தண்மதி யுங்கடந்
தாண்முழுந் தண்டமு மாகிநின் றானே. (௩)

நின்றா னிலமுழு தண்டத்து ணீளியன்
அன்றே யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றா ரிருவர் திருமுடி மேற்செல
நன்றாங் கழலடி நாடவொண் ணாதே. (௪)

சேவடி யேத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றானு முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்
தாவடி யிட்டுத் தலைப்பெய்து மாறே. (௫)

தானக் கமலத் திருந்த சதுமுகன்
றானக் கருங்கட லூழித் தலைவனும்
ஊனத்தி னுள்ளே யுயிர்போ லுணர்கின்ற
தானப் பெரும்பொருட் டன்மைய தாமே. (௬)

ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்



டாலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்
கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே. (௭)

வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போ லரனை யறிகிலர்
ஆள்கொடுத் தின்பங் கொடுத்துக்கோ ளாகத்
தாள்கொடுத் தானடி சாரகி லாரே. (௮)

ஊழி வலஞ்செய் தங்கோரு மொருவற்கு
வாழிச் சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்து தாவென
ஊழிக் கதிரோ னொளியைவென் றானே. (௯)

---

## சர்வசிருஷ்டி.

ஆதியோ டந்த மிலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்
தீதில் பராபரை மாதிகழ் நாதமே. (௧)

நாதத்தில் விந்துவு நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி யென்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலான்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே. (௨)

இல்லது சத்தி யிடந்தனி லுண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்
வல்லது வாக வழிசெய் தவப்பொருள்
சொல்லது சொல்லிடிற் றூராதி தூரமே. (௩)

தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாத மணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் பார்முத லைந்துக்கும்
ஆர்வத்துச் சத்தியோ டாவத்து மாலுமே. (௪)

* மானின்கண் வானாகி வாயு*வளர்ந்தனிற்
கானின்க ணீருங் கலந்து கடினமாய்த்
தேனின்க ணைந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்
பூவின்க ணின்று பொருந்தும் புவனமே. (௫)

* புவனம் படைப்பா னொருவ னொருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திர ரைவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்
புவனம் படைப்பானப் புண்ணியன் றானே. (௬)

புண்ணிய னந்தி பொருந்து முலகெங்கு
மண்ணியல் பாகி வளர்ந்திடுஞ் சத்தியுந்
தண்ணியல் பாகித் தரணி முழுதுமாய்க்
கண்ணியல் பாகிக் கலந்தெழும் பூவிலே. (௭)

நீரகத் தின்பம் பிறக்கு நெருப்பிடை
காயத்திற் சோதி பிறக்குமக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயிர்ப் பாத மொலிசத்தி
நீரிடை மண்ணி னிலைபிறப் பாமே. (௮)

உண்டுல கேழு முமிழ்ந்தா னுடனாகி
பண்டத் தமரர் தலைவனு மாதியுங்
கண்டச் சதுமுகக் காரணன் றன்னொடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே. (௯)

ஓங்கு பெருங்கட லுள்ளுறு வானொடும்
பாங்கார் கயிலைப் பரபரன் றானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலயன்
ஆங்குயிர் வைக்கு மறிவுணர்த் தானே. (௧௦)

* காரண னன்பிற் கலந்தெங்கு நின்றவன்
நாரண னின்ற நடுவுட லாய்நிற்கும்
பாரண னன்பிற் பதஞ்செய்யு நான்முகன்
ஆரண மாயுல காயமர்ந் தானே. (௧௧)



பயனெளி தாம்பரு மாமணி செய்ய
நயனெளி தாகிய நம்பனொன் றுண்டு
வயனுளி யாயிருந் தங்கே படைக்கும்
பயனெளி தாம்வய னக்கெளிந் தேனே. (௧௨)

போக்கும் வரவும் புனித னருள்புரி
தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற வெட்டுத் திசையொடுந்
தாக்குங் கலக்குந் தயாபரன் றானே. (௧௩)

நின்றுயி ராக்கு நிமலனென் னாருயிர்
ஒன்றுயி ராக்கு மளவை யுடலுற
முன்றுயி ராக்கு முடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானை நவவுடன் [illegible] (௧௪)

ஆகின்ற தன்மையி லக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்திட லாயுளன்
ஆகின்ற தன்மைசெய் யாண்டகை யானே. (௧௫)

* ஒருவ னொருத்தி விளையாட லுற்றார்
இருவர் விளையாட்டு மெல்லாம் விளக்கும்
பருவங்க டோறும் பயன்பல வான
இருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே. (௧௬)

புகுந்தறி வான்புல னுபதி யண்ணல்
புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி யும்முழக் காகின் றாரே. (௧௭)

ஆணவச் சத்தியு மாமதி லவருங்
காரிய காரண வீசர்*கடைமுறை
பேணிய வைந்தொழி லால்விந்து விற்பிறந்
தாணவ நீங்கா தவரென லாகுமே. (௧௮)

உற்றமுப் பாலொன் றுமையா ளுதயமா
மற்றைய மூன்று மாயோ தயம்விந்து
பெற்றவ னாதம் பரையிற் பிறத்தலாற்
றுற்ற பரசிவன் றொல்விளை யாட்டிதே. (௧௯)

ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய வீச னரன்மால் பிரமனும்
ஆகாயம் பூமியுங் காண வளித்தலே. (௨௦)

அளியார் முக்கோண வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை யாமவ டானே
அளியார் சதாசிவ மாகி யமைவாள்
அளியார் கருமங்க ளாந்துசெய் வாளே. (௨௧)

வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரண காரிய மாகக் கலந்தவள்
வாரணி யாரணி வானவம் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே. (௨௨)

நின்றது தானும் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கி யரன்றிரு மால்வன்
மன்றது செய்யு மலர்மிசை மேலயன்
என்றிவ ராக விசைந்திருந் தானே. (௨௩)

* ஒருவனு மேயுல கேழும் படைத்தான்
ஒருவனு மேயுல கேழு மளந்தான்
ஒருவனு மேயுல கேழுங் கடந்தான்
ஒருவனு மேயுட லோடுயிர் தானே. (௨௪)

செந்தா மரைவண்ணன் றீவண்ண னெம்மிறை
மஞ்சார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்துக்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்
ஐந்தார் பிறவி யமைத்துநின் றானே. (௨௫)



தேவர் திசையெட்டுஞ் சேவ றுடலுயிர்
கூடும் பிறவிக் குணஞ்செய்த மாசத்தி
மூடு மவர்தம துள்ளத்தி னுள்நின்று
நாடும் வழக்கமு நானறிந் தேனே. (௨௬)

* ஓராய மேயுல கேழும் படைத்தது
ஓராய மேயுல கேழு நடப்பது
ஓராய மேயுல கேழு மிறப்பது
ஓராய மேயுட லோடுயிர் தானே. (௨௭)

நாத னொருவனு நல்ல விருவருங்
கோதுகு லத்தொடு கூட்டிக் குழைத்தனர்
ஏது பணியென் றிசையு மிருவருக்
காதி யிவனே யருளுகின் றானே. (௨௮)

அப்பரி சென்பத்து நான்குநூ றாயிர
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்
அப்பரி சேதென்று புகலு மனிதர்கள்
அப்பரி சேயிருண் மூடநின் றாரே. (௨௯)

ஆதித்தன் சந்திர னங்கி யெனப்பலர்
போதித்த வாறொலி பொங்கெரி நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்
ஓதுந்த மாலையின் வித்துவி னுற்றதே. (௩௦)

## திதி.

புகுந்துநின் றான்வெளி யாயிரு ளாகிப்
புகுந்துநின் றான்புகழ் வாயிகழ் வாகிப்
புகுந்துநின் றானுட லாயுயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே. (௧)

* தானே திசையொடு தேவரு மாய்நிற்கு
தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே கடன்மலை யாதியு மாய்நிற்குந்
தானே யுலகிற் றலைவனு மாமே. (௨)

உடலா யுயிரா யுலகம தாகிக்
கடலாய்க் கார்முகி னீர்பொழி வானாய்
இடையா யுலப்பிலி யெங்குந்தா னாகி
அடையார் பெருவழி யண்ணனின் றானே. (௩)

தேடுந் திசையெட்டுஞ் சீவ னுடலுயிர்
கூடு மரபிற் குணஞ்செய்து மாகத்தி
யூடு மவர்தம துள்ளத் துளேநின்று
நாடும் வழக்கமு நானறிந் தேனே. (௪)

* தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்குந்
தானொரு கால்சண்ட மாருத மாய்நிற்குந்
தானொரு காலந் தண்மழை யாய்நிற்குந்
தானொரு காலந்தண் மாயனு மாமே. (௫)

* அன்பு மறிவு மடக்கமு மாய்நிற்கும்
இன்பமு மின்பக் கலவியு மாய்நிற்கு
முன்புறு காலமு மூழியு மாய்நிற்கும்
அன்புற வைந்தி னமர்ந்துநின் றானே. (௬)

உற்று வினைவா னவனே யுலகினைப்
பெற்று வினைவா னவனே பிறவியைச்
சுற்றிய சாலுங் குடமுஞ் சிறுதூதை
மற்று மவனே வினையவல் லானே. (௭)

உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றானந்தி
வெள்ளுயி ராகும் வெளியா னிலங்கொளி
உள்ளுயிர்க் கும்முணர் வேயுட லுட்பரந்
தள்ளுயி ராவண்ணந் தாங்கிநின் றானே. (௮)



தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை
ஓங்கி யெழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கிநின் றானுமத் தாரணி தானே. (௯)

அணுகினுஞ் சேயவ னங்கியிற் கூடி
நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணியினும் பார்மிசைப் புல்லுயி ராகித்
தணியினு மன்னுட லண்ணலஞ்செய் வானே. (௧௦)

## சங்காரம்.

* அங்கிசெய் தீச னகலிடஞ் சுட்டது
அங்கிசெய் தீச னலைகடற் சுட்டது
அங்கிசெய் தீச னசுரரைச் சுட்டது
அங்கியவ் வீசற்குக் கையம்பு தானே. (௧)

இலயங்கண் மூன்றினு மொன்றகற் பாந்த
நிலையன் றழிந்தமை நின்றுணர்ந் தேனு
னுலைதந்த மெல்லரி போலு முலக
மலைதந்த மானிலந் தான்வெந் ததுவே. (௨)

பதஞ்செய்யும் பாரும் பனிவரை யெட்டு
முதஞ்செய்யு மேழ்கட லோத முதலாங்
குதஞ்செய்யு மங்கி கொளுவியா காசம்
விதஞ்செய்யு நெஞ்சின் வியப்பில்லை தானே. (௩)

கொண்டல் வரையின் றிழிந்த குலக்கொடி
அண்டத்து ளூறி யிருந்தெண் டிசையாதி
ஒன்றின் பதஞ்செய்த வோமென்ற வப்புறங்
குண்டத்தின் மேலங்கி கோலிக்கொண் டானே. (௪)

* நித்தசங் கார முறக்கத்து நீண்மூடம்
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாஞ்
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் காரம் பரனரு ளுண்மையே. (௬

நித்தசங் கார மிரண்டுட லீவுதல்
வைத்தசங் காரமு மாயாள்சங் காரமாஞ்
சுத்தசங் கார மனாதீதத் தோய்வித்தல்
உய்த்தசங் காரஞ் சிவனரு ளுண்மையே. (௭

நித்தசங் காரங் கருவிடர் நீக்கிறல்
ஒத்தசங் கார முடலுயிர் நீவுதல்
வைத்தசங் காரங் கேவல மான்மாவுக்
குய்த்தசங் காரஞ் சிவமாகு முண்மையே. (௮

நித்தசங் காரமு நீடிளைப் பாற்றுதல்
வைத்தசங் காரமு மன்னு மனாதியிற்
சுத்தசங் காரமுந் தோயாப் பரனருள்
வைத்தசங் காரமு நாலா மதிக்கிலே. (௯

* பாழே முதலா வெழும்பயி ரவ்விடம்
பாழே யடங்கினும் பண்டைப்பா ழாகாவாம்
வாழாச்சங் காரத்தின் மாலயன் செய்தியாம்
பாழாம் பயிரா யடங்குமப் பாழிலே. (௰

தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை
மாயம்வைத் தான்வைத்த வன்பதி யொன்றுண்டு
காயம்வைத் தான்கலந் தெங்கு நினைப்பதோர்
ஆயம்வைத் தாயுணர் வாரவைத் தானே. (௰௧

## திரோபாவம்.

* உள்ளத் தொருவனை யுள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா வொருவனை



உள்ளமுந் தானு முடனே யிருக்கினும்
உள்ள மவனை யுருவறி யாதே. (௧)

இன்பப் பிறவி படைத்த விறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயரு ளடைந்தனன்
என்பிற் கொளுவி யிசைந்துறு தோற்றமை
முன்பிற் கொளுவி முடிகின்ற வாறுமே. (௨)

இறையவன் மாதவ னின்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த விரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாரே. (௩)

காண்கின்ற கண்ணொளி காதற்செய் யீசனை
ஆண்பெண் ணலியுரு வாய்நின்ற வாதியைப்
பூண்படு நாவுடை நெஞ்ச முணர்த்திடச்
சேண்படு பொய்கைச் செயலணை யாரே. (௪)

தெருளு முலகிற்குத் தேவர்க்கு மின்பம்
அருளும் வகைசெய்யு மாதிப் பிரானுஞ்
சுருளுஞ் சுடருறு தூவெஞ் சுடரும்
இருளு மறநின் றிருட்டறை யாமே. (௫)

அரைக்கின் றருட்கு மங்கை யோசை
உரைக்கின்ற வாசையு மொன்றொடொன் றொவ்வாப்
பரக்கு முருவமும் பாசகத் தாளுக்
கரக்கின் றவைசெய்த காண்டகை யானே. (௬)

தளிர்த்துவைத் தென்னுள் ளுறவுணர்ந் தீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே
களிப்பொடுங் காதன்மை யென்னும் பெருமை
வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்கியு மாமே. (௭)

நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கு மயன்றிரு மாலவன்
நன்றது செய்யு மலர்மிசை மேலயன்
என்றிவ ராகி யிசைந்திருந் தானே. (அ)

ஒருங்கிய பாசத்து ளுத்தம சித்தன்
இருங்கரை மேலிருந் தின்புற நாடி
வருங்கரை யோரா வகையினிற் கங்கை
அருங்கரை பேணி யுழக்கது வாமே. (௯)

* மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிக ளெல்லா மொருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலு மவ்வண்ண மாகிநின் றானே. (௧0)

## அநுக்கிரகம்.

எட்டுத் திசையு மடிக்கின்ற காற்றவன்
வட்டத் திரையனல் மாநில மாகாசம்
ஒட்டி யுயிர்நிலை யென்னுமிக் காயப்பை
கட்டி யவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே. (௧)

உச்சியி லோங்கி யொளிதிகழ் நாதத்தை
நச்சியே யின்பங் கொள்வார்க்கு நமனில்லை
விச்சும் விரிசுடர் மூன்று முலகுக்கும்
வைச்ச மவனே சமைக்கவல் லானே. (௨)

* குசவன் றிரிகையி லேற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போலெங்கள் கோனந்தி வேண்டில்
அசைவி லுலக மதுவிது வாமே. (௩)



விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படையுடை யான்பரி சேயுல காக்குங்
கொடையுடை யான்குண மேகுண மாகுஞ்
சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே. (௪)

உகந்துநின் றேபடைத் தானுல கேழும்
உகந்துநின் றேபடைத் தான்பல வூழி
உகந்துநின் றேபடைத் தானைந்து பூதம்
உகந்துநின் றேயுயி ருண்படைத் தானே. (௫)

படைத்துடை யான்பண் டுலகங்க ளேழும்
படைத்துடை யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல சீவரை முன்னே
படைத்துடை யான்பர மாகிநின் றானே. (௬)

ஆதி படைத்தன வைம்பெரும் பூதங்கள்
ஆதி படைத்தன ரையபல் லூழிகள்
ஆதி படைத்தன வெண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கிநின் றானே. (௭)

* அகன்றா னகலிட மேழுமொன் றாகி
இவன்றா னெனநின் றெளியனு மல்லன்
சிவன்றான் பல்பல சீவனு மாகி
நவின்றா னுலகுறு நம்பனு மாமே. (௮)

உண்ணின்ற சோதி யுறநின்ற வோருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி மாபோ தகமே. (௯)

ஆரு மறியாத வண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற சேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகமறிந் தேனே. (௧0)

# கெற்பக்கிரியை.

ஆக்குகின் றான்முன் பிரிந்த விருபத்தஞ்
சாக்குகின் றானவ னாதியெம் மாருயிர்
ஆக்குகின் றான்கெற்பக் கோளகை யுள்ளிருந்
தாக்குகின் றானவ னாவ தறிந்தே. (௧

அறிகின்ற மூலத்தின் மேலங்கி யப்புச்
செறிகின்ற ஞானத்துச் செக்தாள் கொளுவிப்
பொறைநின்ற வின்னுயிர்ப் போந்துறை காட்டப்
பறிகின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே. (௨

இன்புறு காலத் திருவர்முன் பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வானவன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத்தொழிந் தானே. (௩

கருவை யொழிந்தவர் கண்டநால் மூவேழ்
புருட னுடலில் பொருந்துமற் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
உருவ மிரண்டாக வோடி விழுந்தே. (௪

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதலைந்து மீரைந்தொ டேறிப்
பொழிந்து புனல்பூதம் போற்றுங் கரணம்
ஒழிந்த துதலுச்சி யுள்ளே யொளித்தே. (௫)

பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவுந்
தாவி யுலகிற் றரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீர் வாயுவுங்
கூவி யவிழுங் குறிக்கொண்ட போதே. (௬)

போகின்ற வெட்டும் புகுகின்ற பத்தெட்டு
சூழ்கின்ற முத்தனு மொன்பது வாய்தலு



நாகமு மெட்டெட னாலு புரவியும்
பாகன் விடாவிடிற் பன்றியு மாமே. (௭)

ஏற வெதிர்க்கி லிறையவன் றானாகு
மாற வெதிர்க்கி லரியவன் றானாகு
நேரொக்க வைக்கி லிகர்போதந் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரா சானுமே. (௮)

ஏயங் கலந்த விருவர்தஞ் சாயத்துப்
பாயுங் கருவு முருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மனோலய மானதே. (௯)

கெற்பத்துக் கேவல மாயாள் இனைகூட்ட
நிற்குந் துரியம் பேதித்து நினைவெழ
வற்புறு காமிய மெட்டாதல் மாயேயஞ்
சொற்புறு தூய்மறை வாக்கினுஞ் சொல்லே. (௧௦)

என்பால் மிடைந்து நரம்பு வரிகட்டிச்
செம்பா லிறைச்சித் திருந்த மனைசெய்து
இன்பா லுயிர்நிலை செய்த விறையோற்கு
கண்பா லொருவனை நாடுகின் றேனே. (௧௧)

பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனிப் பகலோன்
இதஞ்செய்யு மொத்துட லெங்கும் புகுந்து
குதஞ்செய்யு மங்கியின் கோபந் தணிப்பான்
விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே. (௧௨)

ஊழிபல செய்யும் வினையுற்ற நாளே
வழிபல நீராட்டி வைத்தமு வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே. (௧௩)

சுக்கில நாடியிற் றோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்
புக்கிடு மெண்விரற் புறப்பட்டு நால்விரல்
அக்கர மெட்டுமெண் சாணது வாருமே. (கச)

போகத்து ளாங்கே புகுந்த புனிதனுங்
கோசத்து ளாகங் கொணர்ந்த கொடைத்தொழில்
ஒகத்து ளாங்கே யிரண்டெட்டு மூன்றைந்து
போகத்து ளாங்கொரு மூட்டைசெய் தானே. (கரு)

பிண்டத்தி னுள்ளுறு பேதப் புலனைந்தும்
பிண்டத்தி னூடே பிறந்து மரித்தது
அண்டத்தி னுள்ளுறு சிவனு மவ்வகை
அண்டத்து நாதத் தமர்ந்திருந் தானே. (கசா)

இலைப்பொறி யேற்றி யெனதுட லீசன்
றுலைப்பொறி யிற்கரு வைத்துட னூட்டி
நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவி
உலைப்பொறி யொன்பதி லொன்றுசெய் தானே. ()

இன்புற் றிருந்தவ ரிசைவித்து வைத்தமண்
துன்பக் கலச மணைவா னொருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே. (கஅ)

அறியீ ருடம்பினி லாகிய வாறும்
பிறியீ ரதனிற் பெருகுங் குணங்கள்
செறியீ ரவற்றினுட் சித்திக ளெட்ட
தறிவீ ரைந்தினுள் ளானது பிண்டமே. (கக)

உடல்வைத்த வாறு முயிர்வைத்த வாறு
மடல்வைத்த வொன்பது வாய்தலும் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியு ளங்கி
கடைவைத்த வீசனைக் கைகலந் தேனே. (உ0)



கேட்டுநின் றேனெங்குங் கேடில் பெருஞ்சுடர்
மூட்டுகின் றான்முதல் யோனி மயமவன்
கூட்டுகின் றான்குழம் பின்கரு வையுரு
நீட்டிநின் றாகத்து நேர்பட்ட வாறே. (உக)

பூவுடன் மொட்டுப் பொருந்த வலர்ந்தபின்
காவுடைத் தீபங் கலந்து பிறந்திடு
நீரிடை நின்ற குமிழி நிழலதாய்
பாருட லெங்கும் பரந்தெட்டும் பூத்ததே. (உஉ)

எட்டி விளைந்தாரு மிக்கிரி யங்களுங்
கட்டிய மூல கரணமு மாய்விடும்
ஒட்டிய பாச வுணர்வென்னுங் காயப்பை
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. (உங)

கண்ணுத னாமங் கலந்துடம் பாயிடப்
பண்ணுதல் செய்து பசுபாச நீக்கிட
எண்ணிய வேத மிசைத்த பரப்பினை
மண்முத லாக வகுத்துவைத் தானே. (உச)

அருளல்ல தில்லை யரனவ னன்றி
அருளில்லை யாதலி னுலோ ருயிர்க்குத்
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே. (உரு)

வகுத்த பிறவியின் மாதுநல் லானுந்
தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய பல்வகை யெங்கும்
வகுத்துள்ளு நின்றதோர் மாண்பது வாமே. (உகூ)

மாண்பது வாக வளர்கின்ற வன்னியைக்
காண்பது வாண்பெண் ணலியெனுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தானச் சோதிதன் னுண்மையே. (உஎ)

* ஆண்மிகி லாணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தி லலியாகுந்
தாண்மிகு மாகிற் றாரணி முழுதாளும்
ஆண்வச மிக்கிடில் பாய்ந்தது மில்லையே. (உஅ)

பாய்ந்தபின் னஞ்சோடி லாயுளு நூறாகும்
பாய்ந்தபின் னாலோடில் பாரினி லெண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் தவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே. (உகூ)

பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு விளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாய்வு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லை பார்க்கிலே. (ஙo)

* மாதா வுதர மலமிகின் மந்தனாம்
மாதா வுதரஞ் சலமிகின் மூகையாம்
மாதா வுதர மிரண்டொக்கில் கண்ணில்லை
மாதா வுதரத்தில் வந்த குழவிக்கே. (ஙக)

குழவியு மாணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணா மிடத்தது வாகில்
குழவியு மிரண்டாம் பான னெதிர்க்கில்
குழவி யலியாகுங் கொண்டகா லொக்கிலே. (ஙஉ)

கொண்டநல் வாயு விருவர்க்கு மொத்தெழில்
கொண்ட குழவியுங் கோமள மாயிடுங்
கொண்டநல் வாயு விருவர்க்குங் குழறிடில்
கொண்டது மில்லையாங் கோல்வளை யார்க்கே. (ஙங)

கோல்வளை யுந்தியிற் கொண்ட குழவியுந்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்
பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே. (ஙச)



உருவம் வளர்த்திடு மொண்டிங்கள் பத்திற்
பருவம தாகவே பாரினில் வந்து
மருவி வளர்த்திடு மாயையி னாலே
அருவம தாவதிங் காரறி வாரே. (ஙரு)

இட்டா ரறிந்தில ரேற்றவர் கண்டிலர்
தட்டா னறிந்து மொருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனு மங்குளன்
கெட்டே னெம்மாயையின் கீழ்மையெவ் வாறே. ()

இன்புறு நாடி யிருவருஞ் சந்தித்துத்
துன்புறு பாசத்திற் றோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின்முன் றோற்றிய
தொன்புற நாடியின் றோற்றமு மாமே. (ஙஎ)

* குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைதன் கூட்டிட்டா [ல்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லை போக்கில்லை யேனென்ப தில்லை
மயக்கத்தா லர்க்கை வளர்க்கின்ற வாறே. (ஙஅ)

முதற்கிழங் காய முளையாய் முளைப்பின்
அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்
அதற்கது வாமின்ப மாவது போல
அதற்கது வாய்நிற்கு மாதிப் பிரானே. (ஙகூ)

ஏனோர் பெருமைய னாகிலு மெம்மிறை
யூனே சிறுமையு ளுட்கலந் தாங்குளன்
வானோ ரறியு மளவல்ல மாதேவன்
றானே யறியுந் தவத்தினி னுள்ளே. (சo)

பாத்திற் பதிந்து பதிந்தநற் காயம்
உருத்தரித் திவ்வுட லோங்கிட வேண்டிற்
றிரைக்கடலுப்புத் திரண்டது போலத்
திரித்தும் பிறக்குந் திருவரு ளாலே. (சக)

## மூவகையாருயிர்வர்க்கம்.

சத்தி சிவன்விளை யாட்டா லுயிராக்கி
ஒத்த விருமாயா கூட்டத் திடையூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்
சித்தப் புகுந்து சிவமய மாக்குமே. (க)

விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள யாகலத்
தஞ்ஞானர் மூவருந் தங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதிகள் வேற்றுமை தானே. (உ)

விஞ்ஞானர் கேவலத் தாராது விட்டவர்
அஞ்ஞான ரட்டவித் தேசராஞ் சார்ந்துளோர்
எஞ்ஞான மேழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞான ராணவம் விட்டுநின் றாரே. (ங)

இரண்டா வதில்முத்தி யெய்துவ ரத்தனை
இரண்டாவ துள்ளே யிருமல பெத்தர்
திரண்டாகு நூற்றெட்டு ருத்திர ரென்பர்
முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே. (ச)

பெத்தத்தர் சித்தொடு பேண்முத்திச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடற்றார் சித்துமாய்
மத்தத்து மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் தமிழ்ந்து சகலத்து ளாரே. (ரு)

சிவமாதி யைவகைத் திண்மலஞ் செற்றோர்
அவமாகாச் சித்தர் முத்தாந்தத்து வாழ்வார்
பவமான தீர்வோர் பசுபாச மற்றோர்
நவமான தத்துவ நாடிக்கொண் டாரே. (சா)



விஞ்ஞான ராணவங் கேவல மேவுவோர்
விஞ்ஞானர் மாயையிற் றங்கு மிருமலர்
அஞ்ஞான ரச்சக லத்தர் சகலராம்
விஞ்ஞான ராதிக ளொன்பான்வே றுயிர்களே. (எ)

விஞ்ஞான கன்மத்தர் மெய்யகங் கூடிய
அஞ்ஞான கன்மத்தி னுற்சவர் யோனிபுக்
கெஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்
மெஞ்ஞான ராகிச் சிவமேவ துண்மையே. (அ)

ஆணவந் துற்ற வவித்தா னவற்றோர்
காணிய விந்துவா நாத சகலாதி
ஆணவ மாதி யடைந்தோ ரவரன்றே
சேணுயர் சத்தி சிவதத்வ மாமே. (கூ)

## பாத்திரம்.

* திலமத் தனைபொன் சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. (க)

கண்டிருந் தாருயி ருண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர்க் கொள்ளுங் குணத்தனை
கன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனை
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே. (உ)

கைவிட் டிலேன்கரு வாகிய காலத்து
மெய்விட் டிலேன்விகிர் தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட் டிலாத விடிஞ்சிலு மாமே. (ங)

ஆவன வாவ வழிவ வழிவன,
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யு மிளங்கிளை யோனே. (௫)

## ஆபாத்திரம்.

* கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேயொக்குஞ்
சீலமு நோன்பு மிலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது வாகுமே. (௧)

ஈவது யோக மியம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்
கீவ பெரும்பிழை யென்றுகொள் ளீரே. (௨)

* ஆமா றறியா ததிபஞ்ச பாதகத்
தோமாறு மீசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தால்தந்து கற்பிப்போன்
போமா நரகிற் புகான்போதங் கற்கவே. (௩)

* மண்மலை யத்தனை மாதன மீயினும்
அண்ண லிவனென் றஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த விருவரு
நண்ணுவ ரேழா நரகக் குழியிலே. (௪)

## தீர்த்தம்.

* உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே. (௧)



தளியறி வாளர்க்குத் தண்ணிதா யத்தோன்றுங்
குளியறி வாளர்க்குக் கூடவு மொண்ணான்
வளியறி வாளர்க்கு வாய்க்கிலும் வாய்க்கும்
தெளியறி வாளர்க்குச் சிந்தையு ளானே. (௨)

* உள்ளத்தி னுள்ளே யுணரு மொ[illegible]
கள்ளத்தி னாருங் கலந்தறி வாரில்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் பத்தனு மாமே. (௩)

அறிவா ரமரர்க ளாதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் [illegible]
மறிவார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனன்மூழ்கப் புண்ணிய மாமே. (௪)

கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுறத் தேவோர் தம்மையொப் பாரிலர்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை யொன்றறி யாரே. (௫)

கலந்தது நீர துடம்பிற் கறுக்குங்
கலந்தது நீர துடம்பிற் சிவக்கும்
கலந்தது நீ[illegible]
கலந்தது நீர்நிலங் காற்றது வாமே. (௬)

## திருக்கோயிலிழிவு.

தாவர லிங்கம் பறித்தொன் றிற் றாபித்தால்
ஆவதன் முன்னே யரசு நிலைகெடுஞ்
சாவதன் முன்னே பெருநோ யடுத்திடுங்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. (௧)

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்மபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி-வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவ னாணையே. (௨)

* ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே. (௩)

* முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி யெடுத்துரைத் தானே. (௪)

* பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. (௫)

## அதோமுக தெரிசனம்.

* எம்பெரு மானிறை வாமுறை யோவென்று
வம்பவிழ் வானோ ரசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி யறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் றானே. (௧)

* அண்டமொ டெண்டிசை தாங்கு மதோமுகங்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்ப ருணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே. (௨)

செய்தா னறிவன் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே யுரைத்துப் புகலு மனிதர்கள்



மெய்யே யுரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மணிமிடற் றோனே. (௩)

அந்தி யெழுந்து நவேறு வோங்கிய
செந்தீ கலந்துட் சிவனென நிற்கும்
முந்திக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி யிறைவ னதோமுக மாமே. (௪)

அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகந் தன்னொடு மெங்கு மியலுஞ்
சதோமுகத் தெண்மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுக னாழித் தலைவனு மாமே. (௫)

அதோமுக மாமல ராயது கேண்மின்
மதோமுகத் தாலொரு நூறாய் விரிந்து
வதோமுக மாகிய வந்தமில் சத்தி
வதோமுக மாகி யமர்ந்திருந் தாளே. (௬)

## சிவநிந்தை.

* தெளிவுறு ஞானத்துச் சிந்தையி னுள்ளே
பளிவுறு வாரம ராபதி நாடி
எளியனென் றீசனை நீச ரிகழில்
இனியொன்று பூனையாய்க் கீழது வாகுமே. (௧)

முனிந்தவர் வானவர் தானவ ரெல்லாம்
விளிந்தவர் மெய்யின்ற ஞான முணரார்
அளிந்தமு தூறிய வாதிப் பிரானைத்
தனிந்தவர் கல்லது தாங்கவொண் ணாதே. (௨)

* அப்பகை யாலே யசுரருந் தேவரு
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலு மெய்தா ரிறைவனைப்
பொய்ப்பகை செய்யினு மொன்றுபத் தாமே. (௩)

போகமு மாதர் புல்வி யதுநினைந்
தாகமு முள்கலந் தங்குள ராதலின்
வேதிய ராயும் விகிர்தனு மென்கின்ற
நீதியு ளீச னினைப்பொழி வாரே. (௪)

## குருநிந்தை.

பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந் தாரை யுலைவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி யுற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே. (௧)

* ஓரெழுத் தொருபொரு ளுணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்களாய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே. (௨)

* பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமு மாவியு மாண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாநந்தி தாணே. (௩)

* மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையி னொந்திடத் தீமைகள் செய்தவர்
நூந்திய சுணங்களாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே. (௪)

* ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமு
நாசம தாகுமே நம்நந்தி யாணையே. (௫)

சன்மார்க்கச் சற்குரு சந்நிதி பொய்வரி
னன்மார்க்க முங்குன்று ஞானமுந் தங்காது



தொன்மார்க்க மாய துறையு மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே. (௬)

* கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
வெய்ப்பட்ட கல்லைச் சுமப்போனு விதிபோன்றுங்
கைப்பட்ட செய்யா றுயிர்நிற்கத் தானறக் [பே.
கைப்பிட்டின் பான்போன்றுங் கன்மிஞானிக் கொ

## மயேசுரநிந்தை.

* ஆண்டா னடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டா னடியவ ரையமேற் றுண்பவர்
ஆண்டா னடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்வா நரகமே. (௧)

ஞானியை நிந்திப் பவனு நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமெய் நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே. (௨)

## பொறையுடைமை.

பற்றிநின் றார்நெஞ்சிற் பல்விதா னொன்றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையு நாவையுந்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது மாகமை யாமே. (௧)

ஓலக்கஞ் சூழ்ந்த வுலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனியன் பாதம் பணிந்துய்ய
மாலுக்கு மாதி பிரமற்கு மன்னவன்
ஞாலத் திவர்மிக நல்லரென் றானே. (௨)

ஞானம் விளைந்தவர் நம்பிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ

ளை விளைந்திடு மும்பர்தம் மாதியை
எளை விளைந்தரு ளெட்டலு மாமே. (௩)

வல்வகை யாலு மனையிலு மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செயுங்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத விலயமுண் டாமே. (௪)

## பெரியோரைத் துணைக்கோடல்.

ஓடவல் லார்தம ரோடு நடாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்குவன்
தேடவல் லார்க்கருள் தேவர் பிரானொடுங்
கூடவல் லாரடி கூடுவன் யானே. (௧)

தாமிடர் பட்டுத் [illegible]பார் றயங்கினு
மாமனத் தங்கன்பு வைத்த நிலையாகு
நீயிடர் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னொடும் போதுகண் டாயே. (௨)

அறிவா ரமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே. (௩)

தார்சடை யான்றன் றமரா யுலகினிற்
போர்புக ழாவெந்தை பொன்னடி சேருவர்
வாயடை யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
கோவடைந் தந்நெறி கூடலு மாமே. (௪)

உடையா னடியா ரடியா ருடன்போய்ப்
படையா ரழல்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென வோலமென் றாரே. (௫)



அருமைவல் லான்கலை ஞாலத்துட் டோன்றும்
பெருமைவ லோன்பிற விச்சுழி நீந்தும்
உரிமைவல் லானுணர்ந் தூழி யிருக்குந்
திருமைவல் லாரொடுஞ் சேர்ந்தன னியானே. (௯)

இரண்டாந்தந்திர முற்றிற்று.

ஆ மொத்தம் - ௫௪௮.

மூன்றாந்தந்திரம்.

## அட்டாங்கயோகம்.

உரைத்தன வற்கரி யொன்று மூடிய
நிரைத்த விராசி நிரைமுறை யெண்ணி
பிரைச்சத மெட்டும் பேசிய நந்தி
நிரைத்த வியம நியமஞ்செய் தானே. (௧)

செய்த வியம நியமஞ் சமாதிசென்
றுய்யப் பராசத்தி யுத்தர மருவ
மெய்தக வசநி யாசங்கண் முத்திரை
எய்த வுரைசெய்வ னிந்நிலை தானே. (௨)

அந்நெறி யிந்நெறி யென்னா தட்டாங்கத்
தன்னெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே. (௩)

இயம நியமமே யெண்ணிலா வாதன
நயமுறு பிராணயாம நண்பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறு மட்டாங்க மாவது மாமே. (௪)

## இயமம்.

எழுந்துநீர் பெய்யினு மெட்டுத் திசையுஞ்
செழுந்த ணியமங்கள் செய்யினென் றண்ணற்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. (க)

கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குணன்
நல்லா னடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் பகுர்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையினின் றானே. (உ)

---

## நியமம்.

ஆதியை வேதத்தி னப்பொரு ளாளனைச்
சோதியை யங்கே சுடுகின்ற வங்கியைப்
பாதியை மன்னும் பராசத்தி யோடுடன்
நீதி யுணர்ந்த நியமத்த னாமே. (க)

தூய்மை யருளூண் சுருக்கம் பொறைசெம்மை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே. (உ)

தபஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்து
நிவம்பல செய்யி னியமத்த னாமே. (௩)

---



## ஆதனம்.

பங்கய மாதி பார்தபல் லாதனம்
அங்குள வாமிரு நாலு மவற்றினுள்
சொங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத்
தங்க விருப்பத் தலைவனு மாமே. (க)

ஓரணைப் பதமூரு வின்மேலே லேறிட்
டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைக ளதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே. (உ)

துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
வரிய முழந்தாளி லங்கைகளை நீட்டி
யுருகி யிடமுடற் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திரா சனமே. (௩)

ஒக்க வடியிணை யூருவி லேறிட்டு
முக்கி யுடலை முழங்கை களிலெற்றித்
தொக்க வறிந்து துளங்கா திருந்திடிற்
குக்கிட வாசனங் கொள்ளலு மாகுமே. (௪)

பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
ஆர வோடும் வாயங்காந் தழகுறக்
கோதி னயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே. (௫)

பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதன மோரேழு
முத்தம் மாமுது வாசன மெட்டெட்டுப்
பத்தொடு நூறு பலவா சனமே. (௬)

---

## பிராணாயாமம்.

ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. (௧)

ஆரிய நல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவி னருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. (௨)

புள்ளினு மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோ முணர்வுடை யோருக்கே. (௩)

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறி பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண் டீரே. (௪)

ஏறுதல் பூரக மீரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பக மறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசக
மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே. (௫)

வளியினை வாங்கி வயத்தி லடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாந்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே. (௬)



எங்கே யிருக்கினும் பூரி யிடத்திலே
அங்கே யதுசெய்ய வாக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே. (௭)

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. (௮)

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலா மிரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலால முண்டா னருட்பெற லாமே. (௯)

வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டு மிரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக விவ்விரண்
டோமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க வுண்மையே. ( )

இட்டதவ் வீடிள காதிரே சித்துப்
புட்டி படத்தச நாடியும் பூரித்துக்
கொட்டிய பிராணன் பானனுங் கும்பித்துக்
கட்டி யிருக்க நமனில்லை தானே. (௧௧)

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே. (௧௨)

கூட மெடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவ ரெண்விரற் கண்டிப்பர் நால்விரற்
கூடிக் கொளிற்கோல வஞ்செழுத் தாமே. (௧௩)

பன்னிரண் டானைக்குப் பகலிர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாக னறிகிலன்
பன்னிரண் டானையைப் பாக னறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகலிர வில்லையே. (௧௪)

## பிரத்தியாகாரம்.

கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடிற்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே யிருக்கலு மாமே. (௧)

* நாபிக்குங் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே. (௨)

மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே. (௩)

* நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குல
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேன்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்துந்
தேசத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாகுமே. (௪)

சோதி யிரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் பரானந்த மென்றே குறிக்கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலவொளி யெய்தினல்
ஓதுவ துன்னுட லுன்மத்த மாமே. (௫)



மூலத் துவாரத்தை முக்கார விட்டிரு
மேலைத் துவாரத்தின் மேன்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே. (௬)

எருவிடும் வாச லிருவிரன் மேலே
கருவிடும் வாச லிருவிரற் கீழே
உருவிடு சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே. (௭)

ஒருக்கா லுபாதியை யொண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த வுபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் கரைதலுண் ணோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே. (௮)

புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணந்
திறப்பட்ட நிற்சயஞ் சேர்ந்துட னின்றால்
உறப்பட்டு நின்றது வுள்ளமு மங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. (௯)

குறிப்பினி னுள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிரு ணீங்கி விகிர்தனை நாடுஞ்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென் றுணரில்
அறிப்புறு காட்சி யமரரு மாமே. (௧௦)

## தாரணை.

கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண் டூடே வெளியுறத் தாநோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணா ளடைக்கு வழியது வாமே. (௧)

மலையார் சிரத்திடை வானீ ரருவி
நிலையாரப் பாயு நெடுநாடி யூடேபோய்ச்
சிலையார் பொதுவிற் றிருநட மாடுந்
தொலையாத வானந்தச் சோதிகண் டேனே. (௨

மேலை நிலத்தினுள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தி லெழுகின்ற மூர்த்தியை
யேல வெழுப்பி யிவளுடன் சந்திக்கப்
பாலனு மாவான் பார்நந்தி யாணையே. (௩

கடைவா சலைக்கட்டிக் காலை யெழுப்பி
இடைவாச னோக்கி யினிது ளிருத்தி
மடைவாயிற் கொக்குபோல் வந்தித் திருப்பார்
உடையாம லூழி யிருக்கலு மாமே. (௪

கலந்த வுயிருடன் கால மறியில
கலந்தலை யாது காலி னொருக்கங்
கலந்த வுயிரது காலது கட்டிக்
கலந்த வுயிருடன் காலமு நிற்குமே. (௫

வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே. (௬

வாழலு மாம்பல காலு மனத்திடை
போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறில்
எழுசா லோக மிரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி யறையிலே. (௭

நிரம்பிய வீரைந்தி லைந்திவை போனால்
இரங்கி விழித்திருந் தென்செய்வை பேதாய்
வரம்பினுட் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் கோட்டைப் பொதியலு மாமே. (௮



முன்னம் வந்தன ரெல்லா முடிந்தனர்
பின்னை வந்தவர்க் கென்ன பிரமாண
முன்னூறு கோடி யுறுகதி பேசிடில்
என்ன மாய மிடிகரை நிற்குமே. (௯)

அரித்த வுடலையைம் பூதத்தில் வைத்துப்
பொருத்தவைம் பூதஞ்சித் தாதியிற் போக்கு
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே. (௧௦)

## தியானம்.

வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்தியான முன்னுங்
குருவாய் சிவத்தியானம் யோகத்திற் கூறே. (௧)

கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
வண்ணாக்கி னுள்ளே யகண்ட வொளிகாட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. (௨)

ஒண்ணா நயனத்தி லுற்ற வொளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடல்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோர்க்குப்
பண்ணாம னின்றது பார்க்கலு மாமே. (௩)

ஒருபொழு துன்னா ருடலோ டுயிரை
ஒருபொழு துன்னா ருயிருட் சிவனை
ஒருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை
ஒருபொழு துன்னார் சந்திரப் பூவையே. (௪)

மனத்து விளக்கினை மாண்பட வேற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே.

எண்ணு யிரத் தாண்டு யோக மிருக்கினும்
கண்ணு மூலனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கிற்
கண்ணாடி போலக் கலந்திருந் தானே.

* நாட்ட மிரண்டு நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
ஓட்டமு மில்லை யுணர்வில்லை தானில்லை
தேட்டமு மில்லை சிவனவ னாமே.

நயன மிரண்டு நாசிமேல் வைத்திட்
டுயர்வெழா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே.

மணிக்கடல் யானை வளர்குழல் மேக
மணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்க ளாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே.

கடலொடு மேகக் களிறொடு மோசை
அடலொடு மவ்வினை யண்டாண் டத்துச்
சுடர்மன்னு வேணு சுரிசங்கி னோசை
இடமறி யோகிக்கல் லாலறி யாதே.

ஈச னியல்பு மிமையவ ரீட்டமும்
பாச மிரங்கப் பரந்துயி ராய்நிற்கும்
ஓசை யதன்மணம் போல விடுந்தோர்
ஓசையு மீச னுணரவல் லார்க்கே.



நாத முடிவிலே நல்லா ளிருப்பது
நாத முடிவிலே நல்யோக மிருப்பது
நாத முடிவிலே நாட்ட மிருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே. (கஉ)

உதிக்கின்ற வாறிரு முன்னங்கி லையர்
...திக்கின்ற தேகமுந் ...
அதிக்கின்ற வைவரு ... மொக்க
...திக்கொண்ணை ... (க௩)

பள்ளி யறையிற் பகலே யிருளில்லை
கொள்ளி யறையிற் கொளுந்தாமற் காக்கலாம்
ஒள்ளி தறியிலோ ரோசனை நீளது
வெள்ளி யறையில் விடிவில்லை தானே. (கச)

கொண்ட விரதங் குறையாமற் றொன்றித்
தண்டோ டுதித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டல மூன்றினு மொக்க வளர்ந்தபின்
பிண்டமு மூழி பிரியா திருக்குமே. (கரு)

* அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டல மவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே. (கசா)

இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை யுள்ளே
முளைக்கின்ற மண்டல மூன்றினு மொன்றித்
துளைப்பெரும் பாசத் துருவிடு மாகில்
இளைப்பின்றி மார்கழி யேற்றம தாமே. (கஎ)

முக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலமிட நாழிகை சாதிக்க
வைக்கு முயிர்க்கிலை வானவர் கோனே. (கஅ)

கடலித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக் கிருவிர லுள்ளே
கடலித் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே. (௧௯)

அ[illegible]வாய சத்தென்று மாறா றகன்று
செ[illegible]வான மாயை[illegible]னைத்தரு ளாலே
பிறிய[illegible] பேரா[illegible]ளாயிடும் பெற்றி
நெறியான வன்பர் நிலையறிந் தாரே. (௨௦)

---

## சமாதி.

சமாதி யமாதியிற் றான்சொல்லக் கேட்கிற்
சமாதி யமாதியிற் றானெட்டுஞ் சித்தி
சமாதி யமாதியிற் றங்கினோர்க் கன்றோ
சமாதி யமாதித் தலைப்படுந் தானே. (௧)

விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத வறிவி னரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே. (௨)

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே. (௩)

விண்டலர் [illegible]பருமம் விஞ்சத் தடவியுங்
கண்டனர் வாகக் கருதி யிருப்பார்கள்
சென்று வெளியிற் செழுங்கிரி யத்திடை
கொண்டு குதிரைக் குசைச்செறுத் தானே. (௪)



மூல நாடி முக்கட் டலகுச்சியு
ளேலு வாச னடுவு ளிருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலு மில்லையே. (௫)

மண்டல மைந்து வரைகளு மீரா[illegible]
கொண்டிட நிற்குங் குடிகளு மாறென்ப
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடு மோடும் பதத்தையே. (௬)

பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே. (௭)

உருவறி யும்பரி சொன்றுண்டு வானோர்
கருவரைப் பற்றிக் கடைந்தமு துண்டார்
[illegible]ருவரை யேறி யமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே. (௮)

நம்பனை யாதியை நான்மறை யோதியைச்
செம்பொனி னுள்ளே [illegible]நின்ற சோதியை
யன்பினை யாக்கி ய[illegible] யொடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே. (௯)

மூலத்து மேலது முச்சது ரத்தது
காலத் திசையிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையினில் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. (

* கற்பனை யற்றுக் க[illegible]
சிற்பனை யெல்லாஞ் சிரு[illegible]
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்று
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே.

தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடு மாதுநல் லாளுங்
குலைப்பட் டிருந்திடுங் கோபமு மகலுந்
துலைப்பட் டிருந்திடுந் தூங்கவல் லார்க்கே. (௧௨)

சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியு முன்னின்ற சிவனு மாகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி யடிபணிந் தன்புறு வாரே. (௧௩)

சமாதி செய்வார்க்குத் தரும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டா விறையுட னேகிற்
சமாதி தானில்லைத் தானவ னாகிற்
சமாதியி லெட்டெட்டுச் சித்தியு மெய்துமே. (௧௪)

## அட்டாங்கயோகப்பேறு.

### இயமம்.

போதுகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்
ஏதுகந் தானிவ னென்றருள் செய்திடு
மாதுகந் தாடிடு மால்விடை யோனே. (௧)

### நியமம்.

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவ ரெதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேர்தலு மாமே. (௨)

### ஆதனம்.

வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வ னிவனெனத்



தருந்தண் முழவங் குழலு மியம்ப
விருந்தினி மெய்த்தவ ரீசனு ளானே. (௩)

### பிராணாயாமம்.

செம்பொற் சிவகதி சென்றெய்து காலத்துக்
கும்பத் தமரர் குழாங்க ளெதிர்கொள்ள
வெம்பொற் றலைவ னிவனு மெனச்சொல்ல
இன்பக் கலவி யிருக்கலு மாமே. (௪)

### பிரத்தியாகாரம்.

சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்
ஆரிவ னென்ன வரனு மிவனென்ன
வேறுரு தேவர்க ளெல்லா மெதிர்கொள்ளச்
சாருறு கண்டனை மெய்கண்ட வாறே. (௫)

### தாரணை.

கல்வழி நாடி யமன்வழி மாற்றிடுஞ்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
யில்வழி யாள ரிமையவ ரெண்டிசைப்
பல்வழி யெய்தினும் பார்வழி யாகுமே. (௬)

### தியானம்.

தூங்கவல் லார்க்குந் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத்
தேங்கவல் லார்க்குந் திளைக்கு மமுதமுந்
தாங்கவல் லார்கட்குந் தன்னிட மாமே. (௭)

### சமாதி.

காரிய மான வுபாதியைத் தான்கடந்
தாரிய காரண மேழுந்தன் பாலுற
வாரிய காரண மாயத் தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே. (௮)

# அட்டமாசித்தி.

## பரகாயப்பிரவேசம்.

பணிந்தெண் டிசையும் பரமனை நாடித்
துணிந்தெண் டிசையுந் தொழுதெம் பிரானை
யணிந்தெண் டிசையு மட்டமா சித்தித்
தணிந்தெண் டிசைச்சென்று தாபித்த வாறே. (௧)

பரிசறி வானவர் பண்ப னடியெனத்
துரிசற நாடியே தூவெளி கண்டேன்
அரிய தெனக்கில்லை யட்டமா சித்தி
பெரிதருட் செய்து பிறப்பறுத் தானே. (௨)

குரவ னருளிற் குறிவழி மூலப்
பரையின் மணியிரு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. (௩)

காயாதி பூதங் கலைகால மாயையில்
ஆயாத கலவறி வொன்றற வோரியே
யோயாப் பதியத னுண்மையைக் கூடினால்
வீயாப் பரகாய மேவலு மாமே. (௪)

இருபதி னாயிரத் தெண்ணூறு பேத
மருவிய கன்மமா மந்த யோகந்
தருமிவை காய வுழைப்பாகுந் தானே
யருமிரு நான்கா யடங்குமா சித்திக்கே. (௫)

மதிதனி லீராறாய் மன்னுங் கலையின்
உதய மதுநா லொழியவோ ரெட்டுப்
பதியு மீராறுஞ்செபத்தறப் பார்க்கிற்
றிதமான வீராறு சித்திக ளாமே. (௬)



நாடும் பிணியால் நஞ்சனஞ் சூழ்தக்கால்
நீடுங் கலைகல்வி நின்பேதை கூர்ஞானம்
பீடொன்றி னல்வாயாச் சித்தி பேதத்தின்
வீடுந் தூரங்கேட்டல் நீண்முடி வீராறே. (௭)

ஏழா னதிற் [illegible] டுவியின் வேகியாத்
தாழா நடைபல யோசனை சார்ந்திடுஞ்
சூழான வோரெட்டிற் றோன்று மறைதலா
தாழான வொன்பதிற் றன்பர காயமே. (௮)

ஈரைந்திற் பூரித்தி யான வருந்திறன்
நேரொன்று பன்னொன்றில் ஈசனு மென்சித்தி
ஓரொன்று மேலேழ் மேழும் புவிச்சென்று
வேறொன்று வியாபியாய் நிற்றலீ ராறே. (௯)

தானே யணுவுஞ் சகத்துந்தன் னொண்மையு
மானுக் கனமும் பரகாயத் தேகமுந்
தானுவ தும்பர காயஞ்சேர் தன்மையு
மாறாத வுண்மையும் வியாப்பியு மாமெட்டே. (௧0)

தாங்கிய தன்மையுந் தானணுப் பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை
யாங்கே யெழுந்தோ ரவற்று ளெழுந்துமிக்
கோங்கிய வாமுத்தி முந்திய வாறே. (௧௧)

முந்திய முந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முத லாயிடச்
சிந்தைசெய் மண்முதற் றேர்ந்தறி வாங்கலை
முந்திய ணின்று வுதித்தெழு மாறே. (௧௨)

சித்தந் திரிந்து சிவமய மாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாக லைந்திற் றுடக்கற்றோர்
சித்தம் பரத்திற் றிருநடத் தோரே. (௧௩)

ஒத்தவிவ் வொன்பது வாயுவு மொத்தன
வொத்தவிவ் வொன்பதின் மிக்க தனஞ்செயன்
ஒத்தவிவ் வொன்பதி லொக்க விருந்திட
ஒத்த வுடலு முயிரு மிருந்ததே. (௧௪

இருக்குந் தனஞ்செய னென்பதி
னிருக்கு மிருநூற் றிருபத்து மூன்று
யிருக்கு முடலி லிருந்தில வாகில்
இருக்கு முடலது வீங்கி வெடித்ததே. (௧௫

வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை புலவதாய்
வீங்கிய வாதமுங் கூனு முடமதாம்
வீங்கு வியாதிகள் கண்ணின் மருவியே. (௧௬

கண்ணில் வியாதியு ரோகந் தனஞ்செயன்
கண்ணிலிவ் வாணிகளு காச மவனல்லன்
கண்ணினிற் கூர்மன் கலந்தில னாதலாற்
கண்ணினிற் சோதி கலந்தது மில்லையே. (௧௭

நாடியி னோசை நயன மிருதயந்
தூடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்
தேவரு ளீசன் திருமால் பிரமனு
மோவற நின்றங் குணர்ந்திருந் தார்களே. (௧௮

ஒன்பது வாச லுடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி யுடையதோ ரோரிடம்
ஒன்பது நாடி யொடுங்கவல் லார்கட்கு
ஒன்பது வாச லுலைநல வாமே. (௧௯

ஓங்கிய வங்கியிற் சொன்ன கழி செல்ல
வாங்கி யிரவி மதிவழி யோடிடத்
தாங்கி யுலகங்க ளேழுந் தரித்திட
ஆங்கது சொன்னோ மறிவுடை யோர்க்கே. (௨௦



தலைப்பட்ட வாறண் ணலையிலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போ
றலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்குண்ணை வைத்தோர் வித்தது வாமே. (௨௧)

ஓடிச் சென்றங்கே யொருபொருள் கண்டவர்
நாடியி னுள்ளாக நாதமெழுப்பி
தேடிச் சென்றங்கே தெளிவுற நோக்கியே
பாடியு ணின்ற பகைவரைக் கட்டுமே. (௨௨)

கட்டிட்ட தாமரை நாளத்தி லொன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
தட்டிட்டு நின்று தளங்களி லூடேபாய்
பொட்டிட்டு நின்றது பூரண மானதே. (௨௩)

பூரண சத்தி யெழுமூன் றறையாக
வேரணி கன்னிக ளெழுநூற் றைந்து சாயினர்
நாரண னென்றுக னாகிய வைந்துக்கும்
காரண னாகிக் கலந்து விரிந்ததே. (௨௪)

விரிந்து குவிந்து விளங்கிய மங்கை
கரந்து ளெழுந்து கரந்து இருக்கிற்
பரந்து குவிந்தது பாருடன் பூத
மிரைந்தெழு வாயு விடாவிடி லொங்கே. (௨௫)

இடையொடு பிங்கலை யென்னு மிரண்டு
மடைபடு வாயுவு மாறியே நிற்றூர்
தடையவை யாறெழுந் தண்சுடரு ளென
மிடைவளர் மின்கொடி யன்னி லொங்கே. (௨௬)

ஓங்கி யொருங்கி யுணர்ந்தங் கிருக்கின்
மடங்கி மடங்கிடும் வாயு வதனுண்
மடங்கி மடங்கிடு மன்னுயி ருள்ளே
யடங்கொண்ட கூத்தனை நாடிநின் றேனே. (௨௭)

நாடியி னுள்ளே நாதத் தொலியுடன்
றேடி யுடன்சென் றத் திருவினைக் கைக்கொள
பாடியு னின்றீ பகைவரைக் கட்டிட்டு
மாடி லொருகை மணிவிளக் கானதே. (௨௯)

அணிமாதி சித்திக ளானவை கூறில்
அணுவி லணுவின் பெருமையி னேர்மை
யிணுகாத வேகார் பரகாய மேவல்
லணுவத் தனையெங்குந் தானாத லென்றெட்டே. ()

எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணன் செய்தாற் கிடைத்திடு
மொட்டா நடுநாடி மூலத்த னற்பாலு
விட்டான் மதியுண்ண வும்வரு மேலதே. (௩0)

சித்திக ளெட்டன் றிச் சேரெட்டி யோகத்தாற்
புத்திக ளானவை யெல்லாம் புலப்படுஞ்
சித்திக ளெண்சித்தித் தானாந் திரிபுரைச்
சத்திய ருடரத் தாலுள வாகுமே. (௩௧)

அணிமா.

எட்டிவை தன்னோ டெழிற்பரு மை கூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டம துள்ளே யிருக்கல் பரகாட்சி
யெட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே. (௩௨)

மந்தர மேரு மதியாறு வைமாற்றக்
கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்
தந்தின்றி நற்காமிய லோகஞ்சார் வார்க்கு
மந்த வுலக மணிமாதி யாமே. (௩௩

முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டில்
அணிந்த வணிமாகை தானா மிவனும்



தணிந்தவப் பஞ்சினுந் தானொய்ய தாகி
மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே. (௩௪)

லகுமா.

ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவ மெங்கும் புகலதாய்ச்
சாய்கின்ற காலங் கடன்வழி நின்றிடின்
மாய்கின்ற வையாண்டின் மாலகு வாகுமே. (௩௫)

மாலகு வாகிய மாயனைக் கண்டபின்
றானொளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் படர்ந்தெங்கு நின்றது
மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே. (௩௬)

மகிமா.

மெய்ப்பொருட் சொல்லிய மெல்லிய லாளுடன்
றற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்
மைப்பொரு ளாகு மகிமாவ தாகுமே. (௩௭)

ஆகின்ற காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையா
மேனின்ற காலம் வெளியுற நின்றபின்
தானின்ற காலங் கடன்வழி யாகுமே. (௩௮)

தன்வழி யாகத் தழைத்திடு ஞானமுந்
தன்வழி மீதாகத் தழைத்திடும் வையகந்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாந்
தன்வழித் தன்னரு ளாகிநின் றானே. (௩௯)

பிராத்தி.

நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையா னவையெலாங்

கொண்டவை யோராண்டில் கூட விருந்திடில்
விண்டதுவே நல்ல பிராத்திய தாகுமே. (௩௦

கரிமா.

ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலா
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே. (௩௧

போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத் தின்னொளி
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே. (௩௨

அறிந்த பராசத்தி யுள்ளே யமரிற்
பறிந்தது பூதப் படையவை யெல்லாங்
குறிந்தவை யோராண்டு கூட விருக்கில்
விரிந்தது பரகாய மேவலு மாமே. (௩௩

பிராகாமியம்.

ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னே யுடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி தாகின்றே. (௩௪

ஈசத்துவம்.

நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு கூடி யிருந்திடிற்
பண்டையவ் வீசன தத்துவ மாகுமே. (௩௫

ஆகின்ற சந்திரன் றன்னொளி யாயவன்
ஆகின்ற சந்திரன் றட்பமு மாயிடும்



ஆகின்ற சந்திரன் றன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் றானவ னாகுமே. (௩௬)

தானே படைத்திட வல்லவ னாயிடுந்
தானே யளித்திட வல்லவ னாயிடுந்
தானே சங்காரத் தலைவனு மாயிடுந்
தானே யிவனெனுந் தன்மைய னாகுமே. (௩௭)

தன்மைய தாகத் தழைத்த கலையினுள்
பன்மைய தாகப் பரந்தவைம் பூதத்தை
வன்மைய தாக மறித்திடி லோராண்டின்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே. (௩௮)

வசித்துவம்.

மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனி
னற்பொரு ளாகிய நல்ல வசித்துவங்
கைப்பொரு ளாகக் கலந்த வுயிர்க்கெல்லாந்
தற்பொரு ளாகிய தன்மைய னாகுமே. (௩௯)

தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மைய தாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே. (௪௦)

நற்கொடி யாகிய நாயகி தன்னுடன்
அக்கொடி யாக மறித்திடி லோராண்டு
பொற்கொடி யாகிய புவனங்கள் போய்வருங்
கற்கொடி யாகிய காமுக னாமே. (௪௧)

தாமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம தாயிடு
மாமரு வுன்னிட மெய்யிடு மானனும்
நாமரு வும்மொளி நாயக மானதே. (௪௨)

நாயக மாகிய நலவொளி கண்டபின்
றாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டபின்
பேயக மாகிய பேரொளி காணுமே. (௩௩

பேரொளி யாகிய பெரியவவ் வேட்டையும்
பாரொளி யாகப் பதைப்பறக் கண்டவன்
றூரொளி யாகத் தரணி முழுதுமா
மோரொளி யாகிய காலொளி காணுமே. (௩௪

காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லி
னாலது வக்கொடி நாயகி தன்னுடன்
காலது வைஞ்ஞூற் றொருபத்து மூன்றையுங்
காலது வெண்மண்டிக் கொண்டவிவ் வாறே. (௩௫

ஆறது வாகு மமிர்தத் தலையினுள்
ஆறது வாயிர மூந்நூற் றொடஞ்சுள
வாறது வாயிர மாறு மருவழி
யாறது வாக வளர்ப்பதி ரண்டே. (௩௬

இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
யிரண்டது கால்கொண் டெழுவகை சொல்லில்
இரண்டது வாயிர மைம்பத்தோ டொன்றாய்த்
திரண்டது கால மெடுத்தது மஞ்சே. (௩௭

அஞ்சட னஞ்சு முகமுள நாயகி
அஞ்சட னஞ்சது வாயுத மாவது
அஞ்சது வின்றி யிரண்டது வாயிர
மஞ்சது கால மெடுத்தது மொன்றே. (௩௮

ஒன்றது வாகிய தத்துவ நாயகி
ஒன்றது கால்கொண் டூர்வகை சொல்லிடில்
ஒன்றது வென்றிகொ ளாயிர மாயிரம்
ஒன்றது கால மெடுத்தது முன்னே. (௩௯



முன்னெழு மக்கலை நாயகி தன்னுடன்
மூன்றது வாயு முடிவகை சொல்லிடின்
மூன்றது மைம்பதோ டொன்றுட னஞ்சுமாய்
மூன்றது வாயு முடிவகை யாமே. (௪௦)

ஆய்வரு மத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு வளப்பது சொல்லிடில்
ஆய்வரு மைஞ்ஞூற்று முப்பதோ டொன்பது
வாய்வரு வாயு வளப்புள் ளிருந்ததே. (௪௧)

இருநிதி யாகிய வெந்தை யிடத்து
விருநிதி வாயு வியங்கு நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுட னஞ்சாய்
இருநிதி வாயு வியங்கு மெழுத்தே. (௪௨)

எழுகின்ற சோதியுண் ணாயகி தன்பால்
எழுகின்ற வாயு விடமது சொல்லில்
எழுபத் திருபத் தொன்பா னதுநாலாய்
எழுந்துட னங்கி யிருந்ததில் வாறே. (௪௩)

ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடும்
ஏழது கால்கொண் டிரட்டி யிறக்கிட
எட்டது கால்கொண் டிடவகை யேற்றபின்
ஒன்பது மாநில மொத்தது வாயுவே. (௪௪)

சந்திரன் சூரியன் றற்பரன் றானுமிச்
சந்திரன் றானுந் தலைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு தானாஞ் சகமுகத்
தந்திச் சமாதி யுடையொளி யோகியே. (௪௫)

அணங்கற்ற மாத லருஞ்சன நீவல்
வணங்குற்ற கல்வி மாஞான மிகுத்தல்
சுணங்குற்ற வாயர் சித்திதாங் கேட்டல்
நுணங்கற் றிரோதல்கால் வேகத் துந்தலே. (௪௬)

மாணஞ் சிறைவிடல் வண்பார காய
மிராணஞ் சேர்பூமி யிறந்தோர்க் களித்தல்
ஆரணன் றிருவுரு வாதன்மூ வேழாங்
காணுறு கேள்விக் கணக்கறிந் தோனே. (௬௭)

* ஓத மொலிக்கு மூலகை வலம்வந்து
பாதங்க ளோவ நடக்கும் பயனில்லை
காதலி லண்ணலைக் காண வினியவர்
நாத னிருந்த நகரறி வோரே. (௬௮)

மூல முதல்வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய வைம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பராநாதம் விந்துத் தனிநாதம்
பாலித்த சத்தி பரைபரன் பாதமே. (௬௯)

ஆதார யோகத் ததிதே வொடுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரனொடு
மேதாதி யீரெண் கலைசெல்ல மீதொளி
யோதாவ சிந்தமி தானந்த யோகமே. (௭௦)

மதியமு ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமனின் றானே. (௭௧)

கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டிடு வார்க்கு நமனில்லை தானே. (௭௨)

## கலைநிலை.

காதல் வழிசெய்த கண்ணுத லண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்



காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே. (௧)

காக்கலு மாகுங் கரணங்க ளைந்தையுங்
காக்கலு மாகுங் கலைபதி னாறையுங்
காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவுங்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே. (௨)

நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமு மொத்துக்
கலைவழி நின்ற கலப்பை யறியில்
மலைவழி வாரும் வழியிது வாமே. (௩)

புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியிற்
சடையொன்றி நின்றவச் சங்கர நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே. (௪)

இருக்கின்ற காலங்க ளேது மறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
யொருக்கின்ற வாயு வெளிப்பெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னாமே. (௫)

சாதக மானவத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாச்சினால்
வேதக மாக விளைந்து கிடக்குமே. (௬)

கிடந்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானேயுண் ணாடியை நோக்கிப்
படர்ந்தது தானேபங் கய மாகத்
தொடர்ந்தது தானேயச் சோதியு ணின்றே. (௭)

தானே யெழுந்தவத் தத்துவ நாயகி
யூனே வழிசெய்தெம் முள்ளே யிருந்திடும்

வானோ ருலகின்ற வம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே. (௮)

திகழும் படியே செறிதரு வாயு
வழியும் படியை யறிகில ராரும்
அழியும் படியை யறிந்தபின் னந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே. (௯)

சோதனை தன்னிற் றுரிசறக் காணலா
நாதனு நாயகி தன்னிற் பிரியுநாள்
சாதக மாகுங் குருவழிப் பட்டு
மாதன மாக மதித்துக், கொள்ளீரே. (௧௦)

ஈரா று காற்கொண் டெழுந்த புரவியைப்
போரமற் கட்டிப் பெரிதுண வல்லிரேல்
நீரா யிரமு நிலமாயிரத் தாண்டும்
போகாது காயம் பிராணந்தி யாணையே. (௧௧)

ஓசையி லேழு மொளியின்க ணைந்து
நாசியின் மூன்று நாவி லிரண்டுந்
தேசியுந் தேசனுந் தன்னிற் பிரியுநாண்
மாசறு சோதி வகுத்துவைத் தானே. (௧௨)

---

## சரீரசித்தியுபாயம்.

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே. (௧)

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. (௨)



சுழித்துக் கொடுக்கவே சுத்திக் கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கு முபாய மறிவார்க்
கழற்றித் தவிர்ந்துட லஞ்சன மாமே. (௩)

அஞ்சனம் போன்றுட லையறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத்தி யானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறு
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே. (௪)

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குல
நான்றவிழ் முட்டையி ரண்டையுங் கட்டியிட்
டூன்றி யிருக்க வுடலழி யாதே. (௫)

நூறு மறுபது மாறும் வலம்வர
நூறு மறுபது மாறு மிடம்வர
நூறு மறுபது மாறு மெதிரிட
நூறு மறுபது மாறும் புகுவரே. (௬)

சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாசியங் கேட்கலாந்
தித்தித்த கூத்துஞ் சிவானும் வெளிப்படுஞ்
சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி யாணையே. (௭)

திறந்திறம் விந்து திகழு மகார
முறப்பற வேவினைத் தோதுஞ் சகார
மறிப்பது விந்திர மன்னிய நாத
மறப்பற யோகிக் கறநெறி யாமே. (௮)

உந்திச் சுழியி னுடனேர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினன்
முந்தி முகட்டி னிறுத்திய பானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே. (௯)

மாறு மலக்கு தந்தன்மே லிருவிற்
கூறு விலிங்கத்தின் கீழே குறிக்கொண்மி
னூறு முடம்பிடை யண்ணலு மங்குளன்
கூறு முபதேசங் கொண்டது காணுமே. (க0)

நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி யாணையே. (கக)

அண்டஞ் சுருங்கி லதற்கோ ரழிவில்லை
விண்டஞ் சுருங்கிற் பிராண னிலைபெறும்
உண்டி சுருங்கி லுபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. (கஉ)

பிண்டத்து ளுற்ற பிழக்கடை வாசலை
அண்டத்து ளுற்று வடைத்தடைத் தேறிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழன் மாதரார்
கண்டிச் சிக்குங் காயமு மாமே. (கங)

சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி
அழலு மிரதத்து ளங்கியு ளீசன்
கழல்கொ டிருவடிக் காண்குறி லாங்கே
நிழலுளுந் தெற்றுளு நிற்றலு மாமே. (கச)

வான்கண்ட வன்னியு நாலு கலையேழுந்
தான்கண்ட வாயுஞ் சரீர முழுதொடும்
ஊன்கண்டு கொண்ட வுணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே. (கரு)

ஆகுஞ் சனவேத சத்தியை யன்புற
நீகொள்ளி னெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகு படுத்திப் பல்கோடி களத்திலும்
ஊழ்கொண்ட மந்திரந் தன்னை யொடுக்கே. (கசு)



## காலசக்கரம்.

மதிவட்ட மாக வரையஞ்சு நாடி
இதுவிட்டிங் கோரா றமர்ந்த வதனுற்
பதிவட்டத் துண்ணின்று பாலிக்கு மாறு
மதுவிட்டுப் போமாறு மாயவுற் றேனே. (க)

உற்றறி வைந்து முணர்ந்தறி வாரேழுங்
கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்ற தறியா தழிகின்ற வாறே. (உ)

அழிகின்ற வாண்டவை யையஞ்சு மூன்று
மொழிகின்ற முப்பது மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் டென்ப
தெழுகின்ற வீரைம்ப தெண்ணற் றிருந்தே. (ங)

திருந்து தினமுத் தினத்தினத் தோடின்
றிருந்தறி நாளொன் றிரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே. (ச)

மனைபுகு வீரும் மனத்திடை நாடில்
எனவிரு பத்தஞ்சு மீரா றதனுற்
றனையறிந் தோரட்டுத் தற்குறி யாறு
வினையறி யாது விளங்கிய நாலே. (ரு)

நாலுங் கடந்தது நால்வரு நாலஞ்சு
பாலங் கடந்தது பத்திப் பதினஞ்சு
கோலங் கடந்த குணத்தாண்டு மூவிரண்
டாலங் கடந்ததொன் றூறறி வாரே. (சு)

ஆறு மிருபது மையஞ்சு மூன்றுக்குந்
தேறு மிரண்டு மிருபத்தொ டாறிவை

கூறு மதியொன் றினுக்கிரு பத்தேழு
வேறு பதியங்க ளாய்விதித் தானே. (எ)

விதித்த விருபத் தெட்டொடொன் றனையாகத்
தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்
பகுத்தறி பத்தெட்டுப் பாரா திகளால்
உகுத்தறி மூன்றிரண் டொன்றின் முறையே. (அ

முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்
இறையிறை யார்க்கு மிருக்க வரிது
மறையது காரண மற்றொன்று மில்லை
பறையறை யாது பணிந்து முடியே. (கூ

முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர்
இடிஞ்சி லிருக்க விளக்கெரி கொண்டு
கடிந்தனன் மூலக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினி னண்ணலு மாமே. (க0

நண்ணுஞ் சிறுவிர லாணாக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராம லொத்திடுஞ்
சென்னியின் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடில்
உன்னி யனைத்திடு மோவியந் தானே. (கக

ஓவிய மான வுணர்வை யறிமின்கள்
பாவிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவி லிருந்திடும் புண்ணியத் தண்டே. (கஉ

தண்டுட னோடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்துட லொத்திடுங்
கண்டவர் கண்டனர் காணார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் றாரே. (கங



பிணங்கி யழிந்திடும் போது கேளினி
அணங்குள ளாதித்த னாறு விரியின்
வணங்குட னவைத்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே. (கச)

சுழல்கின்ற வாறின் றுணைமலர் காணான்
றழலிடைப் புக்கிடுந் தன்னு ளிலேசங்
கழல்கண்டு போம்வழி காணவல் லார்க்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே. (கரு)

கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்
பார்த்திருந் துள்ளே யனுபோக நோக்கிடில்
ஆத்தனு மாகி யலர்ந்திரு மொன்றே. (கசு)

ஒன்றில் வளர்ச்சி யுலப்பில கேளினி
நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடுஞ்
சென்றிடு முப்பதுஞ் சேர விருந்திடிற்
குன்றிடைப் பொன்றிகழ் கூத்தனு மாமே. (கஎ)

கூத்தவ னொன்றிடுங் கூர்மை யறிந்தங்
கேத்துவர் பத்தினி லெண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்
சாத்திடு நூறு தலைப்பெய்ய லாமே. (கஅ)

சாத்திடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்துட லாயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துட லாயிரஞ் சேர விருந்தவர்
மூத்துடன் கூடி யுகமது வாமே. (ககூ)

யுகங்கோடி கண்டு மொசிவற நின்று
வகங்கோடி கண்டு ளயலறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய விருந்தங்
குகங்கோடி கண்டங் குயருறு வாரே. (உ0)

உயருறு வாருல கத்தொடுங் கூடிப்
பயனுறு வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிக்கை யிலாமற்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே. (௨௧)

காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்
நாணகி லாதார் நயம்பேசி விடுவர்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெல்லாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே. (௨௨)

கழிகின்ற வப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற வப்பொருள் காணலு மாகுங்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத வப்பொருள் காணலு மாமே. (௨௩)

கண்ணன் பிறப்பிலி காணந்தி யாயுள்ளே
என்னுந் திசைகட னேகாந்த னாயிடுந்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி யாகிற்கு
நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே. (௨௪)

நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்நர பதி யாயிருப்பர்
தேடவல் லார்க டெரிந்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே. (௨௫)

கூறும் பொருளிது காரவ காரங்க
டேறும் பொருளிது சிந்தையு ணின்றிடக்
கூறு மகாரங் குழல்வழி யோடிட
மாறு மமர்ந்திடு மண்ணலு மாமே. (௨௬)

அண்ண லிருப்பிட மாரு மறிகிலர்
அண்ண லிருப்பிட மாய்ந்துகொள் வார்களுக்
கண்ண லழிவின்றி யுள்ளே யமர்ந்திடும்
அண்ணலைக் காணி லவனிவ னாகுமே. (௨௭)



அவனிவ னாகும் பரிசறி வாரில்லை
அவனிவ னாகும் பரிசது கேளீர்
அவனிவ னோசை யொளியினு ளொன்றிடும்
அவனிவன் வட்டம தாகிநின் றானே. (௨௮)

வட்டங்க ளேழு மலர்ந்திடு மும்முனே
சிட்ட னிருப்பிடஞ் சேர வறிகிலீர்
ஒட்டி யிருந்துள் ளுபாய முணர்ந்திடக்
கட்டி யிருப்பிடங் காணலு மாகுமே. (௨௯)

காணலு மாகும் பிரம னரியென்று
காணலு மாகுங் கறைக்கண்ட னீசனைக்
காணலு மாகுஞ் சதாசிவ சத்தியுங்
காணலு மாகுங் கலந்துடன் வைத்ததே. (௩௦)

## ஆயுள்பரிட்சை.

வைத்தகை சென்னியி னேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்கிடி லோரா றிங்களா
மத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்த லுயிர்க்கொரு திங்களி லோசையே. (௧)

* ஓசையு மீசனு மொக்கு முணர்வின்கண்
ஓசை யிறந்தவ னீசனை யுள்குவர்
ஓசை யிறந்தவர் நெஞ்சினு ளீசனும்
ஓசை யுணர்ந்த வுணர்வி துவாமே. (௨)

ஆமே யழிகின்ற வாயுவை நோக்கிடு
மாமே லுறைகின்ற நன்மை யளித்திடும்
பூமே லுறைகின்ற போதகம் வந்திடுந்
தாமே யுலகிற் றலைவனு மாமே. (௩)

தலைவ னிடம்வலஞ் சாதிப்பா ரில்லை
தலைவ னிடம்வல மாயிடிற் றையற்
தலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சிற்
தலைவ னிடம்வலந் தன்வழி நூறே. (௪)

அறிய வாறினி லெண்பது சென்றிடுந்
தேறிய வேழிற் சிறக்கும் வகையெண்ணில்
ஆறொரு பத்தா யமர்ந்த விரண்டையுந்
தேறியே நின்று தெளியிவ் வகையே. (௫)

இவ்வகை யெட்டு மிடம்பெற வோடிடில்
அவ்வகை யையொன்ப தேயென்ன வறியலாஞ்
செவ்வகை யொன்பதுஞ் சேரவே நின்றிடின்
மூவ்வகை யாமது முப்பத்து மூன்றே. (௬)

மும்மூன்று மொன்று முடிவுற நின்றிடில்
எண்மூன்றி னாலு மிடவகை யாய்நிற்கும்
ஐம்மூன்று மோடி யகலவே நின்றிடிற்
பன்மூன்றொ டாறு பார்க்கலு மாமே. (௭)

பார்க்கலு மாகும் பகல்முப் பதுமாகில்
ஆக்கலு மாகுமவ் வாறிரண் டுள்ளிட்டும்
போக்கலு மாகும் புகலற வொன்றெனிற்
றேக்கலு மாகுந் திருந்திய பத்தே. (௮)

ஏயிரு நாளு மியல்புற வோடிடிற்
பாயிரு நாளும் பகையற நின்றிடுந்
தேய்வுற் மூன்றுந் திகழவே நின்றிடில்
ஆயுரு வாமென் றளக்கலு மாமே. (௯)

அளக்கும் வகைநாலு மவ்வழி யோடிடில்
விளக்கு மொருநாலு மெய்ப்பட நிற்குந்
துளக்கும் வகையைத் தூய்நெறி யோடிற்
களக்க மறமுன்றிற் காணலு மாமே. (௧௦)



காணலு மாகுங் கருதிய பத்தோடிற்
காணலு மாகுங் கலந்த விரண்டையுங்
காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற்
காணலு மாகுங் கருத்தற வொன்றே. (௧௧)

கருது மிருபதிற் காணலா றாகும்
கருதிய வவ்வைந்திற் காண்பது மூன்றாங்
கருது மிருபத் துடனாறு காணிற்
கருது மிரண்டெனக் காட்டலு மாமே. (௧௨)

காட்டலு மாகுங் கலந்திரு பத்தேழில்
காட்டலு மாகுங் கலந்தெழு மொன்[illegible]னிற்
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்தவி [illegible]. (௧௩)

ஈரைந்து மைந்து மிருமூன்று மெட்டுக்கும்
பாரஞ்சி நின்ற பகைபத்து நாளாகும்
வாரஞ்செய் கின்ற வகையாறஞ் சாமாகில்
ஓரஞ்சொ டொன்றொன் றெனவொன்று நாளே. (௧௪)

ஒன்றிய நாள்க ளொருமுப்பத் தொன்றாகிற்
கன்றிய நாளுங் கருத்துற மூன்றாகுஞ்
சென்றுயிர் நாலெட்டுஞ் சேரவே நின்றிடின்
மன்றியல் பாகு மனைவி யிரண்டே. (௧௫)

மனையினி லொன்றாகு மாத[illegible]
சுனையினி லொன்றாகுந் தோன்றின வக்கி
வினையற வோங்கி வெளிசெய்து நின்றாற்
றினையுற நின்ற தலைவனு மாமே. (௧௬)

ஆரு மறியா ரளக்கின்ற வன்னியை
ஆரு மறியா ரளக்கின்ற வாயுவை
ஆரு மறியா ரழிகின்ற வப்பொருள்
ஆரு மறியா வறிவறிந் தேனே. (௧௭)

அறிவது வாயுவொ டைந்தறி வாய
தறிவா யதுதா னுலகுயி ரத்தின்
பிறிவுசெய் யாவகை பேணியுண் ணாடிற்
செறிவது நின்று திகழு மதுவே. (கஅ)

அதுவரு ளும்மரு ளான துலகம்
பொதுவரு ளும்புக ழாளர்க்கு நாளு
மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி
யிதுவருள் செய்யு மிறையவ ளாமே. (கசு)

பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பை
பழப்பதி யாவது பற்றறும் பாச
மழப்படி செய்வார்க் ககலு மதியே. (உ0)

## வாரசரம்.

வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதனிட
மொள்ளிய மந்தனி ரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. (க)

வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதன்மூன்றுந்
தள்ளி யிடத்தே தயங்குமே யாமாகில்
ஒள்ளிய காயத்துக் கூன மிலையென்று
வள்ள னமக்கு மகிழ்ந்துரைத் தானே. (உ)

செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேயென்னும்
இவ்வா றறிகின்ற யோகி யிறைவனே
யொவ்வாத வாயு வலத்துப் புரியவிட்
டவ்வா றறிவார்க்க வானந்த மாமே. (ங)



மாறி வருமிரு பான்மதி வெய்யவன்
ஏறி யிழியு மிடைபிங் கலையிடை
யூற முயிர்நடு வேயு யிருக்கிரந்
தேறி யறிமின் றெரிந்து தெளிந்தே. (ச)

உதித்து வலத்திடம் போகின்ற போது
வதிர்த்தஞ்சி யோடு தலைமகன் றானும்
உயிர்த்தது வேமிக வோடிடு மாகில்
உதித்தவி ராசி யுணர்ந்துகொ ளுற்றே. (ரு)

நடுவுநில் லாம லிடம்வல மோடி
யடுகின்ற வாயுவை யந்தணன் கூடி
யிடுகின்ற வாறு சென்றின் பணிசேர
முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் றானே. (சு)

ஆயும் பொருளு மணிமலர் மேலது
வாயு விதமும் பதினா றுளவலி
போயம் மனத்தைப் பொருகின்ற வாதாரம்
ஆயுவு நாளு முகூர்த்தமு மாமே. (எ)

## வாரசூலம்.

* வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த செய்புத னுத்தரம் பானுவன்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. (க)

* தெக்கணை மாகும் வியாழத்துச் சேர்திசை
யக்கணி சூலமு மாமிடம் பின்னாகிற்
றுக்கமு மில்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மென்மேல் வினையுமே. (உ)

## கேசரியோகம்.

கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்திற் கட்டி யடுப்பை யணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லை தானே. (க)

வண்ணா னொலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினால்
அண்ணாந்து பார்க்க வழுக்கற்ற வாறே. (உ)

இடக்கை வலக்கை யிரண்டையு மாற்றித்
துதிக்கையா லுண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி யுணரவல் லார்கட்
கிறக்கவு வேண்டா மிருக்கலு மாமே. (ங)

ஆய்ந்துரை செய்யி லமுதநின் றூறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்துரை செய்யு நிலாமண் டலமதாய்ப்
பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே. (ச)

நாவி னுனியை நடுவே விசிறிடிற்
சிவனு மங்கே சிவனு முறைவிட
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவது மில்லை சதகோடி யூனே. (ரு)

ஊனூறல் பாயு முயர்வரை யுச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூற லுண்டு தெளிதலு மாமே. (சா)

மேலை யண்ணவில் விரைந்திரு காலிடிற்
காலனு மில்லை கதவுந் திறந்திடும்



ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராநந்தி யாணையே. (எ)

நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கிற் றரணி முழுதாளும்
பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே. (அ)

தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர்
நாவினை நாடி னமனுக் கிடமில்லை
பாவினை நாடிப் பயனறக் கண்டவர்
தேவினை யாடிய தீங்கரும் பாமே. (கூ)

தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவர்
ஆங்கரும் பாக வடையநா வேறிட்டுக்
கோங்கரும் பீரிய கோணை நிமிர்த்திட
ஊங்கரும் பாகியே யூனீர் வருமே. (க0)

ஊனீர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாய நமவென்று
கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே. (கக)

வாய்ந்தறிந் துள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும்
பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்
கூய்ந்தறிந் துள்ளுறை கோயிலு மாமே. (கஉ)

கோயிலி னுள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினு நல்லார் தரணி முழுதுக்கும்
ஆயினு நல்லவர் ஆய்ந்தவர் தம்முளுந்
தீயினுந் தீயாத் தீவினை யாளர்க்கே. (கங)

தீவினை யாளர்தஞ் சென்னியி லுள்ளவன்
பூவினை யாளர்தம் பொற்பதி யானவன்

பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்
மாவினை யாளர்தம் மதியினுள் ளானே. (கச)

மதியி னெழுங்கதிர் போலப் பதினாறாய்ப்
பதிமனை நாலுநாற் றிருபத்து நாலாய்க்
கதிமனை யுள்ளே கணைகள் பரப்பி
யெதிர்மலை யாம லிருந்தனன் றானே. (கரு)

இருந்தனள் சத்தியு மக்கலை சூழ
விருந்தனள் கன்னியு மந்நடு வாக
விருந்தனள் மானே முகநில வாக
விருந்தன டாளு மமுதம் பொழிந்தே. (கசு)

பொழிந்த விருவெள்ளி பொன்மண் ணடையில்
வழிந்துள் ளிருந்தது வான்முத லங்குக்
கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக்
கொழுந்தது வாகுங் குணமது தானே. (கஎ)

குணமது வாகிய கோமள வல்லி
மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கிற்
றணமது வாகிய தத்துவ ஞான
மிணமது வாக விருந்தனன் றானே. (கஅ)

இருந்த பிராணனு முள்ளே யெழுமாம்
பரிந்தவித் தண்டொ டண்டம் பரிய
விரிந்தவப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழுது மாமே. (ககூ)

மண்டலத் துள்ளே மனவொட்டி யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்
பண்டகத் துள்ளே பகலே யொளியாகக்
குண்டலக் காதனுங் கூத்தொழிற் றானே. (உ0)

ஒழிகின்ற வாயுவு முள்ளே யமரும்
கழிகின்ற வாயுவுங் காக்கலு மாகும்



வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்
பழிகின்ற காலத்துப் பையகத் தீரே. (உக)

பையினி னுள்ளே படிக்கத வொன்றிடின்
மெய்யினி னுள்ளே விளங்கு மொளியதன்
கையினுள் வாயு கதித்தங் கெழுந்திடின்
மையணி கோயில் மணிவிளக் காமே. (உஉ)

விளங்கிடும் வாயுவை மேலெழ வுன்னி
நலங்கிடுங் கண்டத்து நாபியி னுள்ளே
வளங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே. (உங)

சொல்லலு மாயிடு மாகத்து வாயுவுஞ்
சொல்லலு மாகுமண் ணீர்க்க தனலுஞ்
சொல்லலு மாகு மினவயஞ் சங்கூடிடத்
தொல்லலு மாந்தூர தெரிசனந் தானே. (உச)

தூர தெரிசனஞ் சொல்லுவன் காணலாங்
காராருங் கன்னி கடைஞான முட்டெய்தி
யோராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன்முன்ன தாமே. (உரு)

முன்னெழு நாபிக்கு முன்னூல் விரற்கீழே
பன்னெழு வேதம் பகலொளி யுண்டென்று
[illegible] வைத்திடத்
தன்னெழு கோயிற் [illegible] மாமே. (உசு)

## பரியங்க யோகம்.

பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழன் மாலையுஞ் சாத்திய
காயக் குழலி கலவி யொடுங்கலந்
தூசித் துனையுறத் தூங்காது போகமே. (க)

போகத்தை யுன்னவே போகாது வாயுவு
மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்தி
குமொத்த மென்முலை யாளுநற் சூதனுந்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே. (உ)

கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வானீ ருருட்டிடத்
தண்டொரு காலுந் தளராது வங்கமே. (ங)

அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே. (ச)

தலைவனு மாயிடுந் தன்வழி ஞானந்
தலைவனு மாயிடுந் தன்வழி போகந்
தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி யஞ்சே. (ரு)

அஞ்சு கடிகையி லாருங் கடிகைமேற்
றுஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகை பரியங்கி யோகமே. (சு)

பரியங்கி யோகத்துப் பஞ்ச கடிகை
யரியவிவ் வியோக மடைந்தவர்க் கல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
யுருகத் தழுவ வொருவர்க்கொண் ணாதே. (எ)

ஒண்ணாத யோகத்தை யுற்றவ ரென்னில்
விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ணா ரமுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணா மெனவெண்ணி யிருந்தா னிருந்ததே. (அ)



ஏய்ந்த பிராய மிருபது முப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கு மானந்த
மாய்ந்த குழலியோ டைந்து மலர்ந்திடச்
சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே. (கூ)

வெள்ளி யுருகிப் பொன்வழி யோடாமே
கள்ளத்திட் டானார் கரியிட்டு மூடினார்
கொள்ளி பறிய குழல்வழி யேசென்று
வள்ளிய ளுவி லடக்கிவைத் தாரே. (க0)

வைத்த விருவருந் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தங் கலங்காது செய்கின்ற வானந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே. (கக)

வெங்கதி ருக்குஞ் சனிக்கு மிடைநின்ற
நங்கையைப் புல்கிய நம்பிக்கோ ரானந்தந்
தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனந்
திங்களிற் செவ்வாய்ப் புதைந்திருந் தாரே. (கஉ)

திருத்திப் புதனைத் திருத்தல்செய் வார்க்குக்
கருத்தழ காலே கலந்தங் கிருக்கில்
வருத்தமு மில்லையா மங்கை பங்கற்கும்
அருத்தியுள் வெள்ளியுஞ் சோரா தெழுமே. (கங)

எழுகின்ற தீயின்முன் னேகொண்டு சென்றிட்டால்
மெழுகுரு கும்பரி செய்திடு மெய்யை
உழுகின்ற தில்லை யொளியை யறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. (கச)

வெளியை யறிந்து வெளியி னடுவே
ஒளியை யறியி லுளிமுறி யாமே
தெளியை யறிந்து செழுநந்தி யாலே
வெளியை யறிந்தனன் மேலறி யேனே. (கரு)

மேலாந் தலத்தில் விரிந்தவ ராரெனின்
மாலாந் திசைமுகன் மாநந்தி யாயவர்
நாலா நிலத்தி னடுவா னவப்பொருண்
மேலா யுரைத்தனர் மின்னிடை யாளுக்கே. (கசு)

மின்னிடை யாளுமின் னாளுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தி னுள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்த வல்லீரேல்
மண்ணிடைப் பல்லூழி வாழலு மாமே. (கஎ)

வாங்க லிறுதலை வாங்கலில் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை
வீங்க வலிக்கும் விரகறி வாளரும்
ஓங்கிய தன்னை யுதம்பண்ணி னாரே. (கஅ)

உதமறிந் தங்கே யொருசுழிப் பட்டாற்
கதமறிந் தங்கே கபாலங் கறுக்கு
மிதமறிந் தென்று மிருப்பா ளொருத்தி
பதமறிந் தும்முளே பார்கடிந் தாளே. (ககூ)

பாரில்லை நீரில்லை பங்கய மொன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லை காணு மொளியது வொன்றுண்டு
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே. (உ0)

## அமுரிதாரணை.

உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
உடலி லொருவழி யொன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் நாடலு மாமே. (க)



தெளிதரு மிந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டி னூனமொன் றில்லை
வளியுறு மெட்டின் மனமு மொடுங்குங்
களிதருங் காயங் கனக மதாமே. (உ)

நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறு மிதற்கு மருந்தில்லை மாந்தர்க
டேறி லிதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறு மிதற்கு மறுமயி ராகுமே. (ங)

கரையரு கேநின்ற கான லுவரி
வரைவரை யென்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே. (ச)

அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் கலந்தவிந் நீரிலே
மிளகு நெல்லியு மஞ்சளும் வேம்பிடில்
இளகிடு மேனி யிருளுங் கபாலமே. (ரு)

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்று
நாரி மருந்தென்று நந்தி யருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவா ரகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே. (சு)

## சந்திரயோகம்.

எய்து மதிக்கலை சூக்கத்தி லேறியே
எய்துவ தூல மிருவகைப் பக்கத்துள்
எய்துங் கலைபோல வேறி யிறங்குமாந்
துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே. (க)

ஆகின்ற சந்திரன் சூரிய னங்கியுள்
ஆகின்ற வீரெட்டொ டாறிரண் டீரைந்துள்
ஏகின்ற வக்கலை யெல்லா மிடைவழி
ஆகின்ற யோகி யறிந்த வறிவே. (௨)

ஆறாற தாங்கலை யாதித்த சந்திரன்
ஆறா நலங்கினார் ஞாலங் கவர்கொளப்
பேறாங் கலைமுற்றும் பெருங்காலி லீரெட்டு
மாறாக் கதிர்கொள்ளு மற்றங்கி கூடவே. (௩)

பத்து மிரண்டும் பகலோ னுயர்கலை
பத்தினொ டாறு முயர்கலை யான்மதி
ஒத்தநல் லங்கிய தெட்டெட் டுயர்கலை
அத்திற னின்றமை யாய்ந்துகொள் வீரே. (௪)

எட்டெட் டனலின் கலையாகு மீராறுட்
சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை
கட்டப் படுமீரெட் டாகு மதிக்கலை
ஒட்டப் படாவிவை யொன்றோடொன் றாகவே. (௫)

எட்டெட்டு மீராறு மீரெட்டுந் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனிற் றோன்றுங் கலையெனச்
கட்டப் படுந்தார கைகதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்றொ டாறுங் கலாதியே. (௬)

எல்லாக் கலையு மிடையிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்
செல்லா வெழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் போரே. (௭)

அங்கியிற் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்
தங்கிய தாரகை யாகுஞ் சசிபானு
வங்கியத் தாரகை யாவும் பரையொளி
தங்கு நவசக்ர மாகுந் தரணிக்கே. (௮)



தரணி சலங்கனற் காற்றத் தவான
மரணிய பானு வருந்திங்க ளங்கி
முரணிய தாரகை முன்னிய வொன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே. (௯)

தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னாச் சசிவளர் பக்கத்துத்
தாரகை பூவிற் சகலத்தி யோனிகள்
தாரகைத் தாரகை தானாஞ் சொரூபமே. (௧௦)

முற்பதி னஞ்சின் முளைத்துப் பெருத்திடும்
பிற்பதி னஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதி னஞ்சு மறியவல் லார்கட்குச்
செப்பரி யான்கழல் சேர்தலு மாமே. (௧௧)

அங்கி யெழுப்பி யருங்கதி ரூட்டத்துத்
தங்குஞ் சசியாற் றமமைந் தைந்தாகிப்
பொங்கிய தாரகை யாம்புலன் போக்கறத்
திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே. (௧௨)

ஒன்றிய வீரெண் கலையு முடனுற
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்தழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. (௧௩)

அங்கி மதிகூட வாகுங் கதிரொளி
அங்கி கதிர்கூட வாகு மதியொளி
[illegible] கூடவத் தாரகைத்
அங்கி யதுவே சகலமு மாமே. (௧௪)

ஈராறு பெண்கலை யெண்ணிரண் டாண்கலை
போராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்று நெருப்புற வேபெய்யில்
ஆராத வானந்த மானந்த மானதே. (௧௫)

காணும் பருதியின் காலை யிடத்திட்டு
மாணு மதியதன் காலை வலத்திட்டுப்
பேணியிவ் வாறு பிழையாமற் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே. (கசு)

பாலிக்கு நெஞ்சம் பறையோசை யொன்பதில்
ஆலிக்கு மங்கே யமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்
காலைக்குச் சங்கு கதிரவன் றானே. (கஎ)

கதிரவன் சந்திரன் கால மளக்கும்
பொதிரவ னுள்ளே பொழிமழை நிற்கு
மதிரவ னண்டப் புறஞ்சென் றடர்ப்ப
வெதிரவ னீச னிடமது தானே. (கஅ)

உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை
அந்திக்கு மந்திர மாரு மறிகிலார்
அந்திக்கு மந்திர மாரு மறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே. (ககூ)

ஊதிய மேது மறியா ருரைப்பினும்
ஓதியு மேது மறியாத வூமர்கள்
ஆதியு மந்தமு மந்திக்க வல்லீரேல்
வேதிய னங்கே வெளிப்படுந் தானே. (உ0)

பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்
தீங்கு கதிரையுஞ் சோதித் தனலுறும்
பாம்பு மதியும் பகைதீர்த் துடன்கொளீஇ
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே. (உக)

அயின்றது வீழ்வள வுந்துயி லின்றிப்
பயின்ற சசிவீழ் பொழுதிற் றுயின்று
நயந்தரு பூரணை யுன்ன நடத்தி
வியந்தரு பூரணை மேவுஞ் சசியே. (உஉ)



சசியு தித்கு மளவுந் துயிலின்றிச்
சசியு தித்தே தன துண ருந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாயும்
சசிசரிப் பின்கட்டன் கண்டுயில் கொண்டதே. (உ௩)

ஊழி தரியா திருக்கின்ற யோகிகள்
நாழிகை யாக நமனை யழைப்பர்கள்
ஊழி முதலா யுயர்வா ருலகினிற்
றூழவல் லாரிச் சசிவன்ன ராமே (உச)

தண்மதி பானுச் சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கண் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்
றண்மதி வீழ்வள விற்கண் ணின்றே. (உரு)

வளர்கின்ற வாதித்தன் றன்கலை யாறும்
தளர்கின்ற சந்திரன் றன்கலை யாறும்
மலர்ந்தெழு பன்னிரண் டங்குல மோடி
அலர்ந்து விழுந்தமை யாரறி வாரே. (உசு)

ஆருயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து
போம்வழி யெங்கணும் போகாது யோகிக்குக்
காமுற வின்மையிற் கட்டுண்ணு மூலத்தில்
ஓமதி யத்துள்விட் டோரையுணர் வாலே. (உஎ)

வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாறெட்டுஞ்
[illegible] துற வேறிற்றும்
ஈறிலி னன்கலை யீரைந்தொ டேமதித்
தாறுள் கலையு ளகலுவா வாமே. (உஅ)

உணர்விந்துச் சோணி யுறவினன் வீசம்
புணர்விந்து வீசங் கதிரிற் குறையில்
உணர்வு முடம்பு முவவொக்க நிற்கில்
உணர்வு முடம்பு மொருக்கால் விடாவே. (உகூ)

விடாத மனபவ னத்தொடு மேவி
நடாவு சிவசங்க நாதங் கொளுவிக்
கடாவிடா வைம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன வின்பம் பருகா ரமுதமே. (கo)

* அமுதப் புலன்வரு மாற்றங் கரைமேற்
குமிழக் கத்தந் சுடரைக்கையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு
நமனில்லை நற்கலை நாளில்லை தானே. (கக)

உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறந்
தெண்ணீ ரிணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ராகலக்
கண்ணாற் றொடேசென்று கால்வழி மாறுமே. (க௨)

மாறு மதியு மாதித்தனு மாறின்றித்
தாறு படாமல் தண்டோடே தலைப்படில்
ஊறு படாதுடல் வேண்டு முபாயமும்
பாறு படாவின்பம் பார்மிசைப் பொங்குமே. (கங)

மூன்றாந்தந்திரம் முற்றிற்று.

ஆ மொத்தம்-அஅக.

## நாலாந்தந்திரம்.

### அசபை.

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேனறை யோசிவ யோகத்தை
ஏற்றுகின் றேனெம்பி ரானோ ரெழுத்தே. (க

ஓரெழுத் தாலே யுலகெங்குந் தானாகி
ஈரெழுத் தாலே யிசைந்தங் கிருவராய்



மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கமே யுற்றதே. (உ)

* தேவ ருறைகின்ற சிற்றம் பலமென்றுந்
தேவ ருறைகின்ற சிதம்பர மென்றுந்
தேவ ருறைகின்ற திருவம் பலமென்றுந்
தேவ ருறைகின்ற தென்பொது வாமே. (ங)

* ஆமேபொன் னம்பல மற்புத மானந்தம்
ஆமே திருக்கூத்த னவரத தாண்டவம்
ஆமே பிரளய மாகுமத் தாண்டவம்
ஆமேசங் காரத் தருந்தாண் டவங்களே. (ச)

தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்
தாண்டவ மான தனுக்கிர கத்தொழில்
தாண்டவங் கூத்துத் தனிநின்ற தற்பரந்
தாண்டவங் கூத்துத் தமனியந் தானே. (ரு)

* தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்குந்
தானே யகார வுகாரம தாய்நிற்குந்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலந் தானே. (சா)

தராதல மூலைக்குத் தற்பர மாபரன்
தராதலம் வெப்பு நமவா சியவாந்
தராதலஞ் சொல்லிற் றனவா சியவாகுந்
தராதல யோகந் தயாவாசி யாமே. (எ)

ஆமே சிவங்க ளுகார வகாரங்கள்
ஆமே பரங்க ளறியா விடமென்ப
ஆமே திருக்கூத் தடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி யானந்த மாமே. (அ)

ஆனந்த மூன்று மறிவிரண் டொன்றாகும்
ஆனந்தஞ் சிவாய வறிவார் பலரில்லை
ஆனந்த மோடு மறியவல் லார்கட்கு
ஆனந்தக் கூத்தா யகப்படுந் தானே. (௯)

படுவ திரண்டும் பலகலை வல்லார்
படுவ தோங்கார பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் தாண்டவப் பத்தி
படுவது கோணம் பரந்திடும் வாறே. (௧௦)

வாறே சதாசிவ மாறிலா வாகமம்
வாறே சிவகதி வண்டுறை புன்னையும்
வாறே திருக்கூத்து வாகம வசனங்கள்
வாறே பொதுவாகு மன்றி னமலமே. (௧௧)

அமலம் பதிபசு பாசங்க ளாகமம்
அமலந் திரோதாயி யாகுமா னந்தமாம்
அமலஞ்சொல் லாணவ மாய்கை காமியம்
அமலந் திருக்கூத்தங் காடி யிடந்தானே. (௧௨)

தானே தனக்குத் தலைவனு மாயிருக்குந்
தானே தனக்குத் தனமலை யாயிருக்குந்
தானே தனக்குத் தன்மய மாயிருக்குந்
தானே தனக்குத் தலைவனு மாமே. (௧௩)

தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே. (௧௪)

இணையார் திருவடி யெட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை யீரைஞ்ச தாகும்
இணையார் கழலிணை யைம்பத்தொன் றாகும்
இணையார் கழலிணை யேழா யிரமே. (௧௫)



ஏழா யிரமா யிருபதாய் முப்பதாய்
ஏழா யிரத்து மெழுகோடி தானுகி
ஏழா யிரத்தாயி ரெண்ணிலா மந்திர
ஏழா யிரண்டா யிருக்கின்ற வாறே. (௧௬)

* இருக்கின்ற மந்திர மேழா யிரமாம்
இருக்கின்ற மந்திர மித்திற மில்லை
இருக்கின்ற மந்திரஞ் சிவன்திரு மேனி
இருக்கின்ற மந்திர மிவ்வண்ணந் தானே. (௧௭)

தானே தனக்குத் தகுநட்டந் தானுந்
தானே யகார வுகாரம தாயிருக்குந்
தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்
தானே யுலகிற் றனிநடந் தானே. (௧௮)

நடமிரண் டொன்றே நளினம தாகு
நடமிரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து
நடமிரண் டொன்றே நகைசெயா மந்திர
நடஞ்சிவ லிங்க நலஞ்செம்பு பொன்னே. (௧௯)

* செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகும் ஸ்ரீயுங் கிரீயுமென
செம்புபொன் னான திருவம் பலமே. (௨௦)

திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத்
திருவம் பலமாக வீரைந் திருத்தித்
திருவம் பலமாக விருபத்தைஞ் சாக்கித்
திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே. (௨௧)

வாறே சிவாய நமச்சி வாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே யருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. (௨௨)

பொன்னான மந்திரம் புகலவு மொண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ் கத்தாகும்
பொன்னான மந்திரம் புகைபுண்டு பூரிக்கிற்
பொன்னாகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே. ( )

* பொற்பாதங் காணலாம் புத்திர ருண்டாகும்
பொற்பாதத் தாளையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. (௨௪)

சொல்லு மொருகூட்டிற் புக்குச் சுகிக்கலா
நல்ல மடவார் நயந்துட னேவருஞ்
சொல்லிலும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடுஞ்
சொல்லுந் திருக்கூத்தின் சூக்குமந் தானே. (௨௫)

சூக்கும மெண்ணா யிரஞ்செபித் தாலுமேற்
சூக்கும மான வழியிடைக் காணலாஞ்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
சூக்கும மான சிவனதா னந்தமே. (௨௬)

ஆனந்த மொன்றென் றறைந்திட மானந்தம்
ஆனந்தம் -ஆ-ஈ-ஊ-ஏ-ஓமொன் றறைந்திடம்
ஆனந்த மானந்தமஞ்சம தாயிடும்
ஆனந்தம் அம்-ஹ்ரீம்- அம்-க்ஷம்- ஆம்-ஆகுமே. (௨௭)

மேனி யிரண்டும் விளங்காமல் மேற்கொள்ள
மேனி யிரண்டுமிக்கார விகாரிய
மேனி யிரண்டும் -ஊ-ஆ-ஈ-ஏ-ஓ-என்று
மேனி யிரண்டும்-ஈ-ஊ-ஊ-ஆ-எ-கூத்ததே. (௨௮)

கூத்தே சிவாய நமமசி வாயிடுங்
கூத்தே-ஈ-ஊ-ஆ-எ-ஓம்-சிவாயநம வாயிடுங்
கூத்தே-ஈ-ஊ-ஆ-எ-ஓம்-சிவாயநம வாயிடுங் [வாறே
கூத்தே-இ-ஊ-ஆ-எ-ஓம் நமசிவாய கோனொன்றே



ஒன்றிரண் டாடவோ ரொன்று முடனாட
ஒன்றினின் மூன்றாட வோரேழு மொத்தாட
ஒன்றிநா லாடவோ ரொன்பது முடனாட
ஒன்றினி லாடினான் மாணிக்கக் கூத்தே. (௩௦)

## திருவம்பலச்சக்கரம்.

இருந்தவில் வட்டங்க ளீராறி ரேகை
இருந்த விரேகைமே லீரா றிருத்தி
இருந்த மனைகளு மீராறு மதிதான்
இருந்த மனையொன்றி லெய்துவன் றானே. (௧)

நாவென்றி வாழிடந் தன்னெழுத் தேயாகும்
நாவென்று மந்தானுந் தன்பே ரெழுத்தாகும்
நாவென்று நாற்கோணந் தன்னை யெழுத்தாகும்
நாவென்றி லேயெழுந்து மவ்வரன் றானே. (௨)

* அரகர வென்ன வரியதொன் றில்லை
அரகர வென்ன வறிகிலர் மாந்தர்
அரகர வென்ன வமரரு மாவர்
அரகர வென்ன வரும்பிறப் பன்றே. (௩)

எட்டு நிலையுள வெங்கோ னிருப்பிடம்
எட்டினி லொன்று மிருமூன்று நீரேழும்
ஒட்டிய விந்துவு நாதமு மோங்கிடப்
பட்டது மந்திரம் பான்மொழி பாலே. (௪)

மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஒட்டி யிருந்த வுபாய மறிகிலர்
விட்ட வெழுத்தை விடாத வெழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்கவல் லாரே. (௫)

ஆலய மாக வமர்ந்தபஞ் சாக்கரம்
ஆலய மாக வமர்ந்தவித் தூலம்பேர்
ஆலய மாக வருகின்ற சூக்கும்ம்
ஆலய மாக வமர்ந்திருந் தானே.

இருந்தவிவ் வட்ட மிருமூன்றி ரேகை
இருந்த வதனுள் ளிரேகை யைந்தாக
இருந்த வறைக ளிருபத்தைஞ் சாக
இருந்த வறையொன்றி லெய்து மகாரமே

மகார நடுவே வளைத்திடுஞ் சத்தியை
ஒகாரம் வளைத்திட் டும்பினர்ந் தேற்றி
அகாரந் தலையா யிருகண் சிகாரமாய்
நகார வகாரநற் காலது நாடுமே.

நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்
ஆடு மவர்வா யமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநம சிவாய
வாடுஞ் சிவாயநம புறவட்டத் தாயதே.

ஆயுஞ் சிவாய நமமசி வாயந
வாயு நமசிவா யயநம சிவாயந
வாயுமே வாய நமசியெனு மந்திர
மாயுஞ் சிகாரந் தொட்டந்தந் தடைவிலே.

அடைவினி லைம்பது மேழையர் தறையி
லடையு மறையொன் றுக் கீரெழுத் தாக்கி
அடையு மகாரத்தி லந்தமாம் க்ஷவ்வு
மடைவி னெழுத்தைம் பத்தொன்று மமர்ந்ததே.

அமர்ந்த வரகர வாம்புற வட்டம்
அமர்ந்த வரிகரி யாமத னுள்வட்டம்
அமர்ந்த வசபையா மதனுள் வட்டம்
அமர்ந்தவி ரேகையு மாகின்ற சூலமே.



சூலத் தலையினிற் றோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினிற் சூழ்மோங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடு மஞ்செழுஞ்
சாலப் பதிக்கு மடையது வாமே. (க௩)

அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஒகார மதஞ்சாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் விட்டம்
பொதுவா மிடைவெளி பொங்குநம் பேரே. (க௪)

பேர்பெற் றதுமூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டத்துட் சந்தியி
னேர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்
பேர்பெற் றிருந்த வியல்பிது வாமே. (க௫)

இயலும்இம் மந்திர மெய்தும் வழியின்
செயலு மறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலு மெழுத்துக்கு முன்னு மிருந்ததே. (க௬)

ஆறெட் டெழுத்தின் மேலாறும் பதினாலு
மேலெட் டதின்மேலே விந்துவு நாதமுஞ்
சேரிட்டு நின்று சிவாய நமவென்னக்
கூறிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே. (கஎ)

அன்ன விருப்ப தனைக் காத்துமே
பெண்ணினல் லாளும் பிரானைக் காத்துமே
எண்ணி யிருவ ரிசைந்தங் கிருந்திடம்
புண்ணிய வாளர் பொருளறி வார்களே. (க௮)

அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
இவ்விட்டு பார்க்கி லிலிங்கம தாய்நிற்கு
மவ்விட்டு மேலே வலியுறக் கண்டபின்
ஒவ்விட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே. (க௯)

அவ்வுண்டு சவ்வுண் டனைத்துமங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்ட சத்தி சதாசிவன் றானே.

அஞ்செழுத் தாலே யமர்ந்தன னந்தியும்
அஞ்செழுத் தாலே யமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே யமர்ந்திருந் தானே.

கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினர்
கூத்தனொ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணுங் குறியது வாமே.

அத்திசைக் குண்ணின்ற வுன்னை யெழுப்பியே
அத்திசைக் குண்ணின்ற நல்லெழுத் தோதினர்
அத்திசைக் குண்ணின்ற வந்த மறையனை
அத்திசைக் குள்ளுற வாக்கினன் றானே.

தானே யளித்திடுந் தையலை நோக்கினால்
தானே யளித்திட்டு மேலுற வைத்திடுந்
தானே யளித்த மகாரத்தை யோதிடத்
தானே யளித்ததோர் கல்லொளி யாகுமே.

கல்லொளி யேயென நின்ற வடதிசை
கல்லொளி யேயென நின்றன னிந்திரன்
கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேயெனக் காட்டிநின் றானே.

தானே யெழுகுணந் தண்சுட ராய்நிற்குந்
தானே யெழுகுணம் வேதமு மாய்நிற்குந்
தானே யெழுகுண மாவது மோதிடில்
தானே யெழுந்த மறையவ னாமே.



மறையவ னாக மதித்த பிறவி
மறையவ னாக மதித்திடக் காண்பர்
மறையவ னஞ்செழுத் துண்ணிற்கப் பெற்ற
மறையவ னஞ்செழுத் தாமது வாகுமே. (௨௭)

ஆகின்ற பாதமு மந்நவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியு ளங்கே மகாரமாம்
ஆகின்ற சியிரு தோள்வவாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுட ரவ்வியல் பாமே. (௨௮)

அவ்வியல் பாய விருமூன் றெழுத்தையுஞ்
செவ்வியல் பாகச் சிறந்தன னந்தியும்
ஔவியல் பாக வொளியுற வோங்கிடிற்
புவ்வியல் பாகப் பார்க்குமின் றானே. (௨௯)

பார்த்திடு மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்
வார்த்தரு மந்திர மாய்த்திட வாங்கித்
தூர்ந்திடு மந்திரஞ் சூழ்பகை போக
ஆர்த்தரு மந்திர மோமென் றெழுப்பே. (௩௦)

ஓமென் றெழுப்பித்தன் னுத்தம நந்தியை
நாமென் றெழுப்பிநின் றவ்வழு தீபத்தை
ஆமென் றெழுப்பியவ் வாறறி வார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்திருந் தாரே. (௩௧)

ஆகின்ற சக்கரத் துள்ளே யெழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கு
ஆகின்ற வைம்பத் தொருவெழுத் துண்ணிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் றானே. (௩௨)

பரமாய வஞ்செழுத் துண்ணடு வாக
பரமாய நவசிவ பார்க்கில் மவயநசி
பரமாய சிவமய மாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே. (௩௩)

நின்ற வெழுத்துக்கண் ணேர்தரு பூதமு
நின்ற வெழுத்துக்கண் ணேர்தரு வண்ணமு
நின்ற வெழுத்துக்கண் ணேர்தரு நின்றிடில்
நின்ற வெழுத்துள்ளு நின்றனன் றானே. (௩௪)

நின்றது சக்கர நீளும் புவியெலா
மன்றது வாய்நின்ற மாயநன் னாடனைக்
கன்றது வாசக் கரத்தனை யத்தியுங்
குன்றிடை நின்றிடுங் கொள்கையு ளாமே. (௩௫)

கொண்டவிச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டவிச் சக்கரத் துள்ளே குறியைந்துங்
கொண்டவிச் சக்கரங் கூத்த னெழுத்தைந்துங்
கொண்டவிச் சக்கரத் துண்ணின்ற கூத்தே. (௩௬)

வெளியிலி ரேகையி லிரேகையி லத்தலை
சுளியி லுகாரமாஞ் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதந்
தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே. (௩௭)

அகார வுகார சிகார நடுவாய்
வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஒகார முதல்வ னுவந்துநின் றானே. (௩௮)

அற்ற விடத்தே அகாரம தாவது
உற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்
செற்ற மறுத்தெழுஞ் சுடர் மெய்ப்பொருள்
குற்ற மறுத்த பொன்போலுங் குளிகையே. (௩௯)

அவ்வென்ற போதினி லுவ்வெழுந் தாலித்தால்
உவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடும்
மவ்வென்றென் னுள்ளே வழிபட்ட நந்தியை
எவ்வணஞ் சொல்லுகே னெந்தை யியற்கையே. ()



நீரி லெழுத்திவ் வுலக ரறிவது
வானி லெழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை யறிவா ரவர்கள்
ஊனி லெழுத்தை யுணர்கிலர் தாமே. (௪௧)

காலை நடுவுறக் காயத்தி லக்கர
மாலை நடுவுற லைம்பது மாவன
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூல நடுவுற முத்திதந் தானே. (௪௨)

நாவியின் கீழது நல்ல வெழுத்தொன்று
பாவிக ளத்தின் பயனறி வாரில்லை
ஓவிய ராலு மறியவொண் ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே. (௪௩)

அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரு மறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரு மறிந்தபின்
அவ்வொடு சவ்வு மருளியு மாமே. (௪௪)

மந்திர மொன்றுள் மலர்ந் [illegible]
உந்தியி னுள்ளே யுதயம்பண் ணாநிற்குஞ்
சந்திசெய் யாநிற்பர் தாமது வறிகிலர்
வந்தி தொழுதுபோ [illegible] (௪௫)

செவிக்கு மந்திரஞ் [illegible]
வாவிக்குள் மந்திர [illegible]
பூவுக்குள் மந்திரம் போக்கற [illegible]
ஆவிக்குள் மந்திர மங்குச மாமே. (௪௬)

அருவினி லம்பர மங்கெழு நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவிய கார சிகார நடுவாய்
உருவிட வூற முறுமந் திரமே. (௪௭)

அகார முயிரே உகாரம் பரமே
மகார மலமாய் வருமுப்ப தாதிற்
சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமாய்
யகார முயிரென் றறைய லுமாமே. (௬௨)

நகார மகாரஞ் சிகார நடுவாய்
வகார மிரண்டும் வளியுடன் கூடி
ஓகார முதற்கொண் டொருக்கா லுரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. (௬௩)

அஞ்சுள வானை யடவியுள் வாழ்வன
அஞ்சுக்கு மஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி யகம்புக லாமே. (௬௪)

ஐந்து கலையி லகாராதி தன்னிலே
வந்த வகாராதி மாற்றி மகாராதி
நந்தியை மூலத்தே நாடிப் பரையொடுஞ்
சந்திசெய் வார்க்குச் சடங்கில்லை தானே. (௬௫)

மருவுஞ் சிவாயமே மன்னு முயிரு
மருமந்த யோகமு ஞானமு மாகுந்
தெருள்வந்த சீவனார் சென்றிவற் றாலே
அருளடங்கி யச்சிவ மாவது வீடே. (௬௬)

அஞ்சக வஞ்செழுத் துண்மை யறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லை மனைக்கு மழிவில்லை
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே. (௬௭)

சிவாயவொ டவ்வே தெளிந்துள்ளத் தோதச்
சிவாயவொ டவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாயவொ டவ்வுந் தெளியவல் லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே (௬௮)



சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஓகார முடனே யொருக்கா லுரைக்கு
மகார முதல்வன் மதித்துநின் றானே. (௬௯)

நம்முதலோரைந்தி னாலெங் கருமங்கள்
அம்முத லைந்தி லடங்கிய வல்வினை
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் சதாசிவன் றானே. (௭௦)

நவமுஞ் சிவமு முயிர்பர மாகுந்
தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்
சிவமொன்றி யைக்கவே செய்பவ ராதலாற்
சிவமென்ப தானு மேனுந்தெளி வுற்றதே. (௭௧)

கூடிய வெட்டு மிரண்டுங் குவிந்தறி
வாடிய நந்தியை ஞானத்து ளேவைத்து
நாடிய வைவரு மங்குற வாவர்க
ளோடி யதனைத் தெளிந்தறி யீரே. (௭௨)

எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர்
எட்டு மிரண்டு மறியாத வேழையர்
எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. (௭௩)

எட்டு வரையின் மேலெட்டு வரைகீறி
இட்ட நடுவு ளிறைவ னெழுத்தொன்றில்
வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டிட்டுச்
சிட்டஞ் செழுத்துஞ் செபிசீக் கிரமே. (௭௪)

தானவர் சட்டர் சதிர ரிருவர்கள்
ஆனவிம் மூவரோ டாற்றவ ராதிகள்
வானப் பதினைந்தும் விந்துவு நாதமுஞ்
சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே. (௭௫)

பட்டண மாதவ மாற்றும் பாரபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நமவென்ப
எட்டனை யாயினு மீசன் றிறத்திறம்
ஒட்டவன் பேசுவ னென்றறி யேனே. (௭௬)

சிவமுதன் மூவரோ டைவர் சிறந்து
அவைமுத லாறிரண் டொன்றொ டொன் றுள
அவைமுதல் விந்துவு நாதமு மோங்கச்
சவைமுதற் சங்கரன் றன்பெயர் தானே. (௭௭)

வித்தாஞ் செசமய மாக வரைகிறி
நத்தார் கலைபதி னைந்நாட் [illegible]ப்பின்
உத்தாரம் பன்னிரண் [illegible] நாகும்
பத்த[illegible]ரம சடங்குபார்த் தோதிடே. (௭௮)

கண்டெழுந் தேன்கம லமல ருள்ளிட்ட
கொண்டொழிந் தேனுடன் கூடிய காலத்துப்
பண்பழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென லாமே. (௭௯)

புண்ணிய வானவர் [illegible]மழை தூவிநின்
றெண்ணுவ ரண்ணல் விணையடி மந்திர
நண்ணுவர் நண்ணி நமவென்று நாமத்தைக்
கண்ணனை யுன்னிக் கலந்துநின் றாரே. (௮௦)

ஆறெழுத் தாவ துவாறு சமயங்கள்
ஆறுக்கு நாலே யிருபத்து நாலென்பர்
சாவித் திரியிற் றலையெழுத் தொன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே. (௮௧)

எட்டினி லெட்டறை யிட்டோ ரறையிலே
கட்டிய வொன்றெட் டாய்க்காணை நிறையிட்டுச்
சுட்டி யிவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
மட்டு முயிர்கட்கு மாபதி யாவுண்டே. (௮௨)



அம்முத லவ்வொடு நாவின னாகியே
அம்முத லாகிய வெட்டிடை யுற்றிட்டு
உம்முத லாகவே யுண்பவ ருச்சிமேல்
உம்முத லாயவ னூற்றுநின் றானே. (௮௩)

நின்ற வரசம் பலகைமே னோராக
ஒன்றிட மவ்விட்டு வோலையிற் சாதகச்
சான்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே. (௮௪)

காண விறலிப் பலகைய மன்றிசை
மரணமிட் டெட்டின் மகார வெழுத்திட்டு
வாணமி லங்காயம் பூசி யடுப்பிடை
மூரணிற் புதைத்திட [illegible] மாகுமே. (௮௫)

ஆங்கு வடமேற் கிலையனார் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசம் பலகையிற்
றாங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்
டோங்காரம் வைத்திடு முச்சாட னத்துக்கே. (௮௬)

உச்சியம் போதி லொளியன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சதி ரத்தின் முதுகாட்டில் வைத்திடு
வைச்சபின் மேலோர் மாரணம் வேண்டிலே. (௮௭)

ஐய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி
ஐய்ந்த வகார முகார மெழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்வம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே. (௮௮)

எண்ணக் கருடனை யேட்டின் யகாரமிட்
டெண்ணுப் பொன்னுளி லெழுவென்னி பூசிட்டோ
வெண்ணுவற் பலகையிட்டு மேற்கே நோக்கி
எண்ணு வெழுத்தொடெண் ணாயிரம் வேண்டிலே. ( )

## அருச்சனை.

* அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
வம்பவிழ் பூக முமாதுளி மந்தாரந்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. (க)

* சாங்கம தாகவே சந்தொடு சந்தனந்
தேங்கமழ் குங்குமங் கர்ப்பூரங் காரகிற்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்
தாங்கே யணிந்துநீ ரர்ச்சியு மன்போடே. (உ)

அன்புட னேநின் றடுத்து மேற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதொறுந்
துன்ப மகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்ப முடனேவந் தெய்திடு முத்தியே. (ங)

எய்தி வழிப்படி லெய்தா தனவில்லை
எய்தி வழிப்படி லிந்திரன் செல்வமுன்
எய்தி வழிப்படி லெண்சித்தி யுண்டாகும்
எய்தி வழிப்படி லெய்திடு முத்தியே. (ச)

நண்ணும் பிறதார நீத்தா ரவித்தார்
மண்ணிய நைவேத் தியமனு சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்று
மன்னு மனபவ னத்தொடு வைகுமே. (ரு)

* வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்ம மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்ம மிகுதியோ ராய்ந்தன்பே. (சு)

அறிவரு ஞானத் தெவரு மறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்



நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே யிருக்கலு மாமே. (எ)

இருளும் வெளிபோ லிரண்டா மிதயம்
அருளறி யாமையு மன்னு மறிவும்
அருளினை விட்டெறி யாமை மயங்கும்
அருளுஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே. (அ)

தானவ னாக வவனே தானாயிட
வானவ விரண்டி லறிவன் சிவமாக்
போனவ னன்பிது நாலா மரபுறத்
தானவ னாருமோ ராதித்த தேவரே. (கூ)

ஓங்கார முந்திக்கீ ழுற்றிடு மெந்நாளு
நீங்கா வகாரமு நீள்[illegible]தாயிடும்
பாங்கார் நகாரம் பயினெற்றி யுற்றிடும்
வீங்காரும் விந்துவு நாதமே லாகுமே. (க0)

நமவது வாசனை மான பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவ தன்றாஞ்
சிவமாகு மாமோனஞ் சேர்தன்மெய் வீடே. (கக)

தெளிவரு நாளிற் சிவவமு தூறும்
ஒளிவரு நாளி லோரொட்டி லுகளும்
ஒளிவரு மப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியா யிருந்தே. (கஉ)

## நவகுண்டம்.

நவகுண்ட மானவை நானுரை செய்யின்
நவகுண்டத் துள்ளெழு நற்பீயந் தானு
நவகுண்டத் துள்ளெழு நன்மைக ளெல்லா
நவகுண்ட மானவை நானுரைப் பேனே. (க)

உரைத்திடுங் குண்டத்தி னுள்ளேழுக் கா
நகைத்தெழு நாற்கோண நன்மை களைந்து
பகைத்திடு முப்புரம் பாரங்கி யோடே
மிகைத்திடு கண்டங்கண் மேலறி யோமே. (௨)

மேலறிந் துள்ளே வெளிசெய் தவம்பொருள்
காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாலறிந் தண்டஞ் சிறகற நின்றது
நானறிந் துள்ளெழு நாடிக்கொண் டேனே. (௩)

கொண்டவிக் குண்டத்தி னுள்ளெழு சோதியாய்
அண்டங்க ளீரேழு மாக்கி யழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்றுசொன் னூலா யெடுத்துவைத் தேனே. (௪)

எடுத்தவக் குண்டத்தி டம்பதி னாறிற்
பதித்த கலைகளும் பாவித்து நிற்குங்
கதித்தன வுள்ளெழக் கண்டுகொள் வார்க்கே
கொதித்தெழு வல்வினை கூடகி லாவே. (௫)

கூடமுக் கூடத்தி னுள்ளெழு குண்டத்துள்
ஆடிய வாறு முகம்புறம் பாய்நிற்கும்
பாடிய பன்னிரு ராசியு மங்கெழ
நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே. (௬)

நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்
கைச்சுட ராகுங் கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர் மேனி பதைப்புற்றி லிங்கமு
நற்சுட ராயெழு நல்லதென் றானே. (௭)

நல்லதென் றானே நமக்குற்ற நாயகன்
சொல்லதென் றானே சுடர்முடிப் பாதமா
மெல்லநின் றானை வினைவலில் லாதவர்
கல்லதன் றானையுங் கற்றுநின் றாரே. (௮)



வென்று விளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்ன பிறன்று [illegible] திக்கெங்கும்
பன்னுவ காலம் பரந்த [illegible]
என்னகத் துள்ளே யிடங்கொண்ட வாறே. (௯)

இடங்கொண்ட பாத மெழுந்தவை சேர
படங்கொண்ட பாதங்க [illegible] நற்குஞ்
சுடங்கொண்ட கையிரண் டாறும் [illegible]
முடங்கொண்ட செஞ்சடை முக்கண னார்க்கே. (௰)

முக்கணன் றானே முழுச்சுட ராயவன்
அக்கணன் றானே யகிலமு முண்டவன்
திக்கண னாகித் திசையெட்டுங் கண்டவன்
எக்கணன் றானுக்கு மெய்த்தை பிரானே. (௧௧)

எந்தை பிரானு மிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்த னிவனென்ன மாட்டிக் கொளீரே. (௧௨)

ஆட்டிய குண்டத்தி னுள்ளெழு வேதத்துள்
நாட்டிய காலொன்று பிரண்டு மலர்த்திடும்
ஈட்டிய கையிரண் டொன்று பதைத்தெழ
நாட்டெஞ் சுசரிவர் நல்லொளி தானே. (௧௩)

நல்லொளி யாக நடந்த வுலகெங்கும்
நல்லொளி யாகக் கலந்து இருந்திடுஞ்
சொல்லொளி யாகத் தொடர்ந்த வுயிர்க்கெல்லாம்
நல்லொளி கண்ணுளு மாகின் றானே. (௧௪)

நின்றவிக் குண்ட நிலையா றுகோணமாய்ப்
பண்டையில் வட்டம் பதைத்தெழு மாறுறுங்
கொண்டவித் தத்துவ முன்னே கலந்தெழ
[illegible] மென்கை வெகுக்கது மாமே. (௧௫)

எடுத்தநின்ற பாதங்கண் மூன்ற தெழுந்தைக்
கடுத்த முகமிரண் டாறுகண் ணுகப்
படுத்தெண்ணு காவெழு தொம்பொருட் டுய
மடுத்தெழு கண்ணு னந்நுமி லார்க்கே. (க௬)

அந்தமில் லானுக் ககலிடந் தானில்லை
அந்தமில் லானை யளப்பவர் தாமில்லை
அந்தமில் லானுக் கடுத்தசொற் றானில்லை
அந்தமில் லானை யறிந்துகொள் பத்தே. (கஎ)

முத்திட்டஞ் செப்பிட் டாறிட்டு நாலிட்டுக்
கட்டிட்ட குண்ட மலர்க்கெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே. (கஅ)

பார்ப்பதி பாகன் பரத்தகை நாலெஞ்சு
கற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாத மிரண்டு சுடர்முடி
காப்பது சோத்திர கல்லிரு பத்தஞ்சே. (ககூ)

அஞ்சிட்ட சோல மனப்பனை வையைந்து
மஞ்சிட்ட குண்ட மலர்த்தல் இருத்தலால்
பஞ்சிட்ட [illegible] பரத்த பாஞ்சுடர்
[illegible] குறிப்பிட்ட வன்னியைக் கூடுதன் முத்தியே. (உ௦)

முத்தந்தச் சோதி முழுச்சுட ராயவன்
ஆர்ந்தது நின்றோர் கருத்து ளிருந்திடும்
பேர்த்தற நாடிப் பிரிந்தொளி பூவிபேரய்
செற்றுநற் றிருந்தவர் சேர்ந்திருந் தாரே. (உக)

சேர்ந்த கலையஞ்சுஞ் சேருயிர்க் குண்டமும்
ஆர்ந்த திசைகளு மங்கே யமர்ந்திடும்
பாய்ந்தவைம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
[illegible] சென்றுங் கலந்தவர் தாமே. (உஉ)